பெரியபுராணத்தில் வாழ்க்கை நெறி



செ. திவான்

பெரிய புராணத்தில் வாழ்க்கை நெறி

வரலாற்றாசிரியர்
செ.திவான், எம்.ஏ,எம்ஃபில்.,

வள்ளல் வைகோ நூலகம்
106-F, 4 A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை - 627 002.
✆ 572665.

ஆசிரியரின் 44-வது நூல்
முதற்பதிப்பு : ஜுலை, 2001.
உரிமை : ஆசிரியருக்கே.
விலை : ரூபாய் பத்து.
அச்சிட்டோர் : ஹமீது பிரஸ், திருநெல்வேலி டவுண்.

பிரார்த்தனை செய்ய வேண்டுகிறோம்

போற்றுதலுக்குரிய பண்புநிறை பெருந்தகையாளர்
கலைப்புலி எஸ்.தாணு அவர்களின்
அருமைத் துணைவியார் மறைந்த குணவதி
திருமதி. **கலாவதி** அம்மையார் அவர்களது
ஆத்மா சாந்தி அடைய அவர்களது நினைவாக
இச்சிறு வெளியீட்டை வெளியிடுகிறோம்;
அவர்களது மறுஉலக நற்பேற்றிற்கும், நல் வாழ்விற்கும்
இறையருள் இறைஞ்சுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

- வள்ளல் வைகோ நூலகம்

106-F, 4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை - 627 002.
✆ 572665.

எண்ண அலைகள்

அடியேன் எழுதிய 'ஆரியப் பாதையில் பசுவதை' எனும் நூலினை மறுமலர்ச்சி இலக்கியமன்றம் சார்பில் 21.1.2001 அன்று நெல்லையில் வெளியிட்டார்கள். போற்றுதலுக்குரிய பண்பாளர் திரு. C.A.R. குட்டி @ சண்முகசிதம்பரம் M.A., B.G.L அவர்கள் தலைமை தாங்கிட மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத்தலைவர் டாக்டர் கு.சதாசிவம் நூலினை வெளியிட, முதற்பிரதியை சாகித்திய அகாதெமி விருதுபெற்ற நாவலாசிரியர் திரு. பொன்னீலன் பெற்றுக்கொண்டார்கள்.

அந்த விழாவில் சாகித்திய அகாதெமி விருதுபெற்ற திரு. தி.க.சி, தோப்பில் முஹம்மது மீரான், மௌலவி முஹம்மது இல்யாஸ் ரியாஜி, மாவட்ட ம.தி.மு.க. செயலாளர்கள் T.A.K இலக்குமணன், மு. சுப்புரத்தினம் எழுத்தாளர் மதுரா மற்றும் பலர் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

24.1.2001 அன்று மிகுந்த ஆபத்தான நிலையில் பாளையங்கோட்டை கிருஷ்ணா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். 1.2.2001 அன்று மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு அனுப்பப்பட்டு ஓய்வில் இருந்தேன். அப்போது 10.2.2001-க்குள் 'பெரியபுராணத்தில் வாழ்க்கை நெறி' எனும் கட்டுரையினை காஞ்சி காம கோடி பீடாதிபதி ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் விருப்பத்துடன் கூடிய போட்டிக்காக அனுப்பலாம் என்ற விளம்பரத்தினைப் பார்த்தேன். இருப்பதோ ஒன்பது நாட்கள்; அதற்குள் கட்டுரை எழுதி சென்னைக்கு அனுப்ப வேண்டும்; உடல் நலமோ; உயிர் பிழைத்து வந்த நிலை; எனினும் இறைவனின் துணையோடு, மூன்று நான்கு நாட்கள் முயன்று அந்தக் கட்டுரையினை எழுதினேன்; வீட்டில் எனது துணைவியாருக்கு சொல்லொணாக் கோபம்; அத்தனையும் தாண்டி ஆண்டவன் அருளால் அந்தக் கட்டுரையினை சிறிய முயற்சிக்குப் பின் அனுப்பினேன். அடியேனுக்கு அதற்கு பரிசும் எதிர்பார்த்தேன்.

(மகாகவி பாரதியார் 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே' என்ற கவிதையினை இரானடே - கோகலே பரிசுப் போட்டிக்கு அனுப்பினார்; பெருங்குளம் அ. மாதவையா பாடிய 'இந்தியக் கும்மி' (51 பகுதிகளால் ஆன கும்மிப்பாட்டு) தலைப்பரிசு பெற்றது. எனினும் பாரதியின் அந்தக் கவிதை அச்சில் வராமல் போகவில்லை.)

மிகுந்த சிரமத்திற்கு இடையே எழுதிய அந்தக் கட்டுரையினை எப்படியும் நூலாக்கிட எண்ணியிருந்தேன். கலைப்புலி போற்றுதலுக்குரிய பண்பாளர் S. தாணு அவர்களின் துணைவியார் திருமதி. கலாவதி அவர்கள் மறைந்த செய்தி அறிந்து பெரிதும் துயருற்றேன்.

இந்த நிலையில் அந்தக் கட்டுரையினை அவர்களின் மறுஉலக நற்பேற்றிற்கு இறைவனை இறைஞ்சி, சிறுவெளியீடாக வெளியிடத் துணிந்தேன்.

அந்த சிறு நூல் இதோ உங்கள் கரங்களில்; நான் சார்ந்திராத மதத்தைச் சார்ந்தவிஷயம் குறித்து எழுதிட வாய்ப்பளித்த காலத்திற்கும் இறைவனுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

-செ. திவான்.

பெரியபுராணத்தில் வாழ்க்கை நெறி

பெரியபுராணம்

''உலகெலாம்''

'உலகெலாம்' உணர்ந்த தோதற் கரியவன்' எனத் தொடங்குவது பெரியபுராணம்; பாயிரத்தில் மட்டுமின்றி தில்லை வாழ் அந்தணர் புராணம் பாட்டு 7, இளையான் குடிமாற நாயனார் புராணம் பாட்டு 15, மானக்கஞ்சாற நாயனார் புராணம் பாட்டு 36, திருக்குறிப்புத் தொண்டர் நாயனார் புராணம் பாட்டு 48, திருநாவுக்கரசர் புராணம் பாட்டு 371, காரைக்கால் அம்மையார் புராணம் பாட்டு 51, திருநீலநக்க நாயனார் புராணம் பாட்டு1, திருஞான சம்பந்தர் புராணம் பாடல்கள் 216, 643, ஏயர்கோன் கலிக்காமர் புராணம் பாட்டு 88, அதிபத்த நாயனார் புராணம் பாட்டு 16, திருநீலகண்ட யாழ்ப்பாணர் புராணம் பாட்டு 7,வெள்ளானைச் சுருக்கம் பாட்டு 40, அதன் நிறைவாக வரும் பாடல் 53 என 15 இடங்களில் 'உலகெலாம்' எனும் சொல் தொடக்கத்துடன் மட்டுமின்றி, இடையில், நிறைவில் வருகின்றது ★

'உலகெலாம்' என்ற பெருமை மிகு சொல் மாத்திரமின்றி உலக வாழ்விற்கான நெறிமுறைகள் பலவற்றை விளக்கும் உன்னத காப்பியம் பெரியபுராணம் ஆகும்.

வரலாறும் புராணமும்

'வரலாறு உண்மையை உணர்த்துவது போலப் புராணங்களும் காவியங்களும், இதிகாசங்களும் உண்மையை உணர்த்துகின்றன. இருப்பினும் வரலாறு உணர்த்தும் உண்மை ஒருவகையானது. புராணங்கள் உணர்த்தும் உண்மை மற்றொரு வகையானது. புகைப்படம் எடுப்பவர் உலகில் நிகழ்வதையே படம் பிடிக்க முடியும்; நிகழப் போவதையும், நிகழ முடியாததையும் படம் பிடிக்க முடியாது; ஓவியக் கலைஞரோ உலகில் நிகழ்வது; நிகழக்கூடியது, நிகழ முடியாதது ஆகிய மூவகைப் பட்டவற்றையும் கலையுருவாக்கிக் காட்டமுடியும். புகைப்படத்திற்கும், ஓவியத்திற்கும் உள்ள இந்த வேறுபாடுகள் வரலாற்றுக்கும், புராணத்திற்கும் உள்ள வேறுபாடு ஆகும்' என்பர் கு. நம்பி ஆருரன் ★★

★ வித்வான் மா. சிவகுருநாதப் பிள்ளை, நாயன்மார்கள் வரலாற்றில் பல்வகைச் செய்திகள், சென்னை, 1999 பக். 30-33.

★★ பெரியபுராணம்-வரலாற்று நூல், கட்டுரையில், 1970, பக் 49.

'வரலாறு உள்ளதைக் கூற ஏற்பட்டது; புராணம் உள்ளதைக் கூறுவதும் உண்டு; உள்ளதைப் புனைந்து கூறுவதும் உண்டு; இல்லாததை இருப்பது போல் கூறுவதும் உண்டு' என்பர் மு. வரதராசனார்★

புராணம் - பழைய வரலாறு

பாருக்குள்ளே நல்ல நாடாம் நம் பாரதத் திருநாட்டில் மக்களின் பழங்கால வரலாறு (Ancient History) சமயத் தொடர்புள்ள கதைகள், அரசர்கள், முனிவர்கள், கடவுளைத் தொழுது பயன்பெற்ற அடியவர்கள் மக்களின் பழக்க வழக்கங்கள் வாழ்க்கை நெறி முறைகள் ஆகியவற்றைப் பற்றி கூறும் விஷயங்கள் புராணங்களில் பொதிந்துள்ளன. உயர்ந்த உண்மைகளையும், தத்துவக் கருத்துக்களையும் ஒன்றும் அறியாத பாமர மக்களும் உணர்ந்து கொள்ளும் படி எளிய இனிய கதைகளால் சுவைமிக விளக்குகின்ற சிறப்பினையுடையவை புராணங்கள்.

இந்தியத் திருநாடு புராணங்களுக்குப் பேர் பெற்றது. புராணம் புனைந்துரையா? வரலாறா? இரண்டுங் கலந்த ஒன்றா? புராணங்கள் இரண்டுங் கலந்த ஒன்று எனக் கொள்வது பொருத்தமாகும். புராணங்களைப் பழைய வரலாறாகக் கொள்ளலாம்.

புராணங்கள் பெரும்பாலும் வரலாற்றுப் பயன்(Historical Value) இல்லாதவை என்ற கருத்து அண்மைக் காலம் வரை வரலாற்று ஆசிரியர்களிடையே நிலவி வந்தது. ஆனால் இப்பொழுது நம் தாய்த் திருநாட்டின் பண்பாட்டினை உணர அவை ஆதாரம் மிக்க நூல்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டு திறனாய்வுக்கண் கொண்டு வரலாற்று ஆய்வாளர்கள் புராணங்களை ஆராய்ந்து வருகின்றனர்★★

புராணம் - புராதனம்

தமிழ் இலக்கிய வகைகளுள் புராணம் என்பதும் ஒன்றாகும். இது வடமொழி இலக்கிய வகைகளில் இருந்து பெறப்பட்டதாகும். 'புரதானம்' என்னும் வடசொல்லின் திரிபு புராணம் ஆகும். புரா-பழமை, ந-புதுமை இவ்வாறாகப் பிரித்துப் பொருள் கூட்டிப் பழமையும் புதுமையும் சேர்ந்து வருவது புராணம் என்பர் வடமொழியாளர்கள்.

'எது தொன்று தொட்டு இன்று வரை பரவியிருக்கிறதோ அதுவே புராணமென்று' வாயுபுராணம் குறிக்கிறது. பழம்பெருமை போற்றிய அரசனைத் 'தொன்மை சுட்டிய வண்மையோன்' (புறநானூறு 330) என்று

★ இலக்கிய ஆராய்ச்சி, பக் 13,

★★ CS. Krishnaswami Aiyangar, Ancient India and South Indian History and culture, vol 1, P. 421

மதுரைக் கணக்காயனார் குறிப்பிட்டுள்ளார். 'தொன்மை தானே உரையொடு புணர்ந்த பழமை மேற்றே' எனும் நூற்பாவிற்கு 'பழமையவாகிய கதைப் பொருளாகச் செய்யப்படுவது அது பெருந்தேவனார் பாரதமும், தகடூர் யாத்திரையும் போல்வன' என்று பேராசிரியர் விளக்குவர்.

தொன்மை என்பதும் புராணம் என்பதும் ஒத்ததே என்பர் பொ.வே.சோமசுந்தரனார். புராணம் என்பதற்கு தொன்மை இணையானது எனத் தெளியலாம் என்பர் சபா. சிவநேசன் ★

வடமொழியில் புராண இலக்கிய வகைகள்

வடமொழியின் இலக்கிய வகை பல பிரிவுகளைக் கொண்டது. அதில் 'பல்வேறுபட்ட விதிமுறைகளை விதித்து அதன்படி ஒழுக அறிவுறுத்துவது' **பிரபுசம் மிதை;** 'நண்பர்களைப் போன்று அறிவுரை சொல்வது **சஹ்ருத்சம் மிதை;** மனைவியைப் போன்று இனிமையாக தம் கருத்தைத் தெரிவிப்பது **காந்தா சம்மிதை;** குழந்தைகளுக்கு கதை சொல்வது போன்று சொல்வது **சிசு சம்மிதை;** (வேதத்திலுள்ள கதைகள் இம்முறையில் சொல்லப்பட்டுள்ளன) வேதக்கருத்துகளைப் பரப்பும் ஒரு கருவியாக புராணங்கள் பயன்பட்டன.

புராண இலக்கணம்

சர்க்கம் (உலகத் தோற்றம்) பிரதிசர்க்கம் (ஒடுக்கம்) மனுவந்தரம் (அரசர் மரபு) வம்சம் (முனி மரபு) வம்சாநுசரிதம் (கால அளவு) ஸ்திதி (தொழில்) ரக்ஷணம் (தெய்வங்களின் அவதாரம்) சமுஸ்தை (வீடு) ஏது (உயிர்) ஆசிரயம் (பிரமம்) இவைகள் புராணங்களின் பாடு பொருள்களாகும். வடமொழியில் புராணங்களை மகாபுராணங்கள், உபபுராணங்கள், அதிபுராணங்கள் என மூவகைகளாகப் பிரித்துள்ளனர். அவை ஒவ்வொன்றும் பதினெட்டுப் புராண நூல்களை உடையனவாக உள்ளன. இதோ அதன் பட்டியலும் வரலாறும்...

புராணங்களின் விவரம்

ஹிந்துக்கள் தமது புராதனமான சுருதி, ஸ்மிருதிகளை அறிந்துய்யச் சக்தியற்ற போது, அவர்களுக்கு சுலபமான பாஷைகளில் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் தருமங்களையறிந்துய்யப் பெரியோர்களால் எழுதப்பட்ட புராணங்களின் விவரங்கள்...

வேத வியாசர்

கிருதயுகத்தில் பிரம்மாவினால் நூறுகோடி கிரந்தங்கள் உள்ள ஒரே நூலாக இயற்றப்பெற்றிருந்தது. திரேதாயுகத்தில் சில ரிஷிகள் அதனை 118

★ புராணங்கள்-அறிமுகப்பார்வை, ஆய்வுக்கோவை, 1989 தொகுதி 1, பக் 400.

சம்ஹிதைகள் உள்ளதாகவும், 18 பிரிவுகள் உள்ள ஒரு கோடி கிரந்தங்களாகச் செய்தனர். அதனைப் பின்னர், துவாபரயுகத்தில் வேத வியாசர் இலட்சம் கிரந்தங்கள் உள்ள 18 புராணங்களாகச் செய்தார் என்று மச்ச புராணம் 53வது அத்தியாயம் அறிவிக்கிறது.

மகா புராணம்

பிரம்மம், பதுமம், வைணவம், சைவம், பாகவதம், பவுஷியம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்நேயம், பிரம்மகைவர்த்தம், இலிங்கம், வராஹம், ஸ்காந்தம், வாமனம், கூர்மம், மச்சம், காருடம், பிரம்மாண்டம் இவை பிரபலமான மகாபுராணங்கள் ஆகும். ★

உப புராணங்கள்

சனற்குமாரம், நாரசிங்கம், நாரதீயம், சிவதருமம், தூருவாசம், காபிலம், மானவம், அவுசனம், வாருணம், காளிகம், சாம்பேசம், நந்திகேச்சுரம், சவுரம், பராசரம், ஆதித்யம், மஹேசுவரம், தேவீபாகவதம், வாசிஷ்டலைங்கம் ஆகியவை உப புராணங்கள் ஆகும். பிற்காலத்தில் எழுந்த இவைகள் சனற்குமாரராலும் வியாசராலும் செய்யப் பெற்றன என்பர்.

அதி புராணங்கள்

பிற்காலத்தில் தோன்றிய பார்க்கவ புராணம், முத்கல புராணம், விநாயக புராணம், ஆதிக புராணம், மகா பாகவதம், தேவி சாதம், கர்க்க புராணம், கல்கி புராணம், கிருஷ்ணா வதாரக்கதை, வசிஷ்டம், பசுபதி, பிரகத்தருமம், பிரகத்காரதீபம், பிஷ்யோத்திரம், பிரகத்வானம், பிரகத்மாதசயம், சிவோத்திர தருமம், கண்டிலெட்சுமி பிரகத்தருமம், பராநந்தம் போன்றவை அதிபுராணங்களாகும்.

தமிழில் புராணம்

தமிழில் புராண இலக்கிய வகை தோன்றுவதற்கு முன்னே 'புராணம்' என்ற சொல் இடம் பெறலாயிற்று. புராணம் என்ற சொல் அருகனைக் (ஜைனர்களின் தேவகுரு) குறிப்பதாக சிலப்பதிகாரத்தில் வருகிறது.

''பொருளன் புனிதன் புராணன் புலவன்'' ★★

புராணன் என்பதற்கு பழையவன் என்று மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் பொருள் தந்துள்ளார்கள் ★★★

★ சேலம், பகடால நரசிம்மலு நாயுடு, மதவிருஷம் அல்லது பூலோகத்திலுள்ள பல மதங்களின் சரித்திரம், சென்னை, 1911, பக் 227, 228.

★★ சிலப்பதிகாரம், புகார்க்காண்டம், நாடுகாண்காதை, பாடல் வரி 179.

★★★ சிலப்பதிகார மூலமும், உரையும், உ.வே.சா. பதிப்பு, சென்னை, 1955, பக் 280.

மணிமேகலையில் சமக்கணக்கர் தந்திறக் கேட்ட காதையில், ''காதல் கொண்டு கடல்வணன் புராணம்'' என்று வருகிறது. அதற்கு 'கடலின் நிறத்தையுடையனாகி விட்டுணு புராணத்தை' என்று நாவலர் பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார், வித்துவான் ஔவை சு. துரைசாமி பிள்ளை ஆகியோர் விளக்கவுரை தந்துள்ளார்கள் ★★★

திருமூலர் 'கலிங்கபுராணம்' என்ற ஒரு பகுதியை அமைத்துள்ளார்; திருவாசகத்தின் முதற்பகுதி சிவபுராணம் எனப் பெயர் பெற்றுள்ளது. பழைமை என்ற பொருளில் 'புராணம்' குறிக்கப்பெற்றுள்ளது.

திருநாவுக்கரசரின் 'பூரணன்கான் புண்ணியன் கான் புராணன் தான் கான்' (6-78) என்ற தொடராலும், 'புராண பூதங்கள்' (9-22) 'புராண சிந்தாமணி' (9-50) என்னும் திருவிசைப்பாவிடத்தும் 'புராணம்' என்ற சொல்லின் ஆளுமையை உணரலாம்.

பெரியபுராணத்தின் தனிச்சிறப்பு

தமிழ்ப் புராணங்களில், சைவ இலக்கியத்தில் சிறந்து விளங்குபவை சிவபெருமானின்திருவிளையாடல்களைப்பற்றிக்கூறும் 'திருவிளையாடற்புராணம்'; முருகப் பெருமானின் புராணக் கதைகளை விரித்துரைக்கும் 'கந்தபுராணம்'; இறைவன் பால் அன்பு செலுத்தி வீடெய்திய தமிழ் நாட்டு மெய்த் தொண்டர் வரலாறுகளைத் தொகுத்துப் பெருங்காப்பிய நயங்களோடு செவ்வையுறக் கூறும் பெரிய புராணம் ஆகிய மூன்றாகும்.

கு. நம்பி ஆருரன்

'பெரிய புராணமானது தேவர், அசுரர், அரக்கர் முதலியயோருடைய பயன் கருதிய தவத்தினையும் போரினையும் புனைந்து எடுத்துக் கூறுவதன்று. பல சமயச் சார்பான கதைகளைக் கலந்து கூறி மயக்கம் விளைவிப்பதன்று. தமிழ்நாட்டிலே பல இடங்களில் வரலாற்றுக்குட்பட்ட காலத்திலே ஊரும் பேரும் உசாவியறியக் தக்க பல்வகை மரபுகளிலுந் தோன்றித் திகழ்ந்து பயன் கருதாது பேரன்புடன் இறைவனை வழிபட்டு அவன் திருவருள் பெற்ற சிவனடியாரின் வரலாறுகளைத் தொகுத்து, உயர்வு நவிற்சியின்றி இணையற்ற இனிய செந்தமிழ் நடையில் கூறுவது பெரிய புராணமாகும்.

தேவாரம், 'திருவாசகம் போலத் தோத்திரப் பாடல்களாக மட்டும் அல்லாமல், நாயன்மாரது வாழ்க்கை வரலாறுமூலம் பக்தி நெறியை

★★★ மணிமேகலை, பாகனேரி, வெ. பெரி.பழ.மு. காசிவிசுவநாதன் செட்டியார் பதிப்பு, 1969, சென்னை, பக் 423.

வளர்க்கும் பாடல்களாகப் பெரியபுராணம் அமைந்துள்ளது தனிச் சிறப்பாகும்' என்பர் பேராசிரியர் கு. நம்பியாரூரன்★

ஸ்ரீ சுந்தர மூர்த்தி நாயனார்

திருவாரூரில் (திருநாவலூரில்) ஆதி சைவப் பிராம்மண குலத்தில் சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் திருமைந்தராய் அவதரித்து, நம்பியாரூரர் என்னும் திருநாமம் பெற்றவர். நரசிங்க முனையரையர் என்னும் மன்னனால் வளர்க்கப்பட்டுத், திருவெண்ணெய் நல்லூரில் தமது திருமணம் நிகழாதபடி தடுத்தாட்கொள்ளப்பட்டுத் திருவாரூரிலே பரவையாரையும், திருவொற்றியூரிலே சங்கிலியாரையும் மணந்து வாழ்ந்தவர் ஸ்ரீ சுந்தர மூர்த்தி நாயனார். இவரது காலம் 9-ஆம் நூற்றாண்டு; இவர் பாடிய பதிகங்கள் 37000; ஆனால் இன்று உள்ளவை 100 பதிகங்கள் மட்டுமே.★★

திருத்தொண்டத் தொகை

இவர் பாடிய ஏழாந்திருமுறையில், *'கொல்லிக்கௌவாண'*ப் பண்ணிலே அமைந்த 11 பாடல்கள் *'திருத்தொண்டத் தொகை'* என அழைக்கப்படுகிறது. திருத்தொண்டத் தொகையில் சுந்தர மூர்த்தி நாயனார் தொகுத்துக் கூறிய அடியார்களின் வரலாறுகளை வகுத்து நம்பியாண்டார் நம்பிகள், *'திருத்தொண்டர் திருவந்தாதி'* பாடியருளினார்.

நம்பியாண்டார் நம்பி

தென்னார்காடு மாவட்டம் திருநாரையூரில் ஆதிசைவ மரபிற் பிறந்தவர்; இங்குள்ள பொல்லாப்பிள்ளையார் கோயிலின் அர்ச்சகராக இருந்தவர்; சோழமன்னர் முதலாம் இராசராசன் வேண்டுகோளின்படி மூவர் தேவாரப் பதிக ஏடுகள் சிதம்பரத் திருக்கோயிலில் இருப்பதறிந்து அவற்றை எடுத்துத் திருமுறைகளாக வகுத்தவர், நம்பியாண்டார் நம்பி.★★★

திருத்தொண்டர் திருவந்தாதி

நம்பியாண்டார் நம்பி, சம்பந்தர் திருவந்தாதி, சம்பந்தர், திருச்சபை விருத்தம், சம்பந்தர் திருமும்மணிக் கோவை, சம்பந்தர் திருவுலா மாலை, சம்பந்தர் திருக்கலம்பகம், சம்பந்தர்-திருத்தொகை, திருநாவுக்கரசர்

★ பெரியபுராணச் சொற்பொழிவுகள், சென்னை, 1970, பக் 50, 51.

★★ ந.சி. கந்தையா பிள்ளை, தமிழ்ப்புலவர் அகராதி, சென்னை, 1960, பக் 186.

★★★ தமிழ்ப்புலவர் வரலாற்றுக் களஞ்சியம், தொகுதி மூன்று, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1989, பக் 198.

திருஏகாதசமாலை, கோவில் திருப்பண்ணியர் விருத்தம், விநாயகர் திரு-இரட்டை மணிமாலை, திருத்தொண்டர் திரு அந்தாதி ஆகிய பத்து நூல்களைப் பாடியுள்ளார். அந்தாதி என்பது இறுதி முதலாகத் தொகுப்பதாகும் என்பர் ரா. இராகவையங்கார்.★

திருத்தொண்டர் திருஅந்தாதி என்பது சுந்தர மூர்த்தி நாயனார் பாடிய திருத்தொண்டத் தொகையைப்பின் பற்றி விரித்துப் பாடப்பட்ட நூலாகும். அதில் 63 நாயன்மார் வரலாற்றுக் குறிப்புகளும், ஒன்பது தொகை அடியார் பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன. இந்த அந்தாதி சேக்கிழாரது பெரியபுராணத்திற்குச் சிறந்த அடிப்படை நூலாகும் என்பர் டாக்டர் மா.இராசமாணிக்கனார்★★

உமாபதி சிவாசாரியார்

சிதம்பரத்திற்கு அண்மையிலுள்ள கொற்றவன் குடியிற் பிறந்த அந்தண மரபினர் உமபதி சிவாசாரியார். இவர் மறைஞான சம்பந்தரின் மாணவர்.

பெரியபுராணம் பாடிய சேக்கிழாரது வாழ்க்கை வரலாற்றைப் பற்றி அறிவதற்குச் சைவ சமய சந்தான குரவருள் ஒருவரான உமாபதி சிவாசாரிய சுவாமிகள் செய்தருளிய திருத்தொண்டர் புராணவரலாறு மிக்க உதவிபுரிகின்றது.

சேக்கிழார்

குன்றத்தூர் கிழாருக்குப் புத்திரராக தொண்டை மண்டலத்தில் பிறந்தவர் சேக்கிழார் எனும் அருண்மொழித் தேவர். அவரது பெரும் புலமையைக் கேள்வியுற்ற அநபாய சோழவேந்தன் (இரண்டாம் குலோத்துங்கன் கி.பி. 1133-1150) அவரைத் தன் தலைமை அமைச்சராக்கி, அவருக்கு 'உத்தம சோழப் பல்லவராயன், என்ற பட்டத்தையும் கொடுத்தார். 'தொண்டர் சீர் பரவு வல்லார், சேவையர் காவலர், எனும் பட்டத்தையும் பெற்ற சிவத்தொண்டர், தெய்வப்புலவர் சேக்கிழார்.

சோழமன்னர் ஜைனநூலாகிய சீவக சிந்தாமணியைக் கேட்டுக் களிப்புடனிருக்கையில், சேக்கிழாரோ, 'பொய்க் கதையைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்களே, மெய்க்கதை கேட்க வேண்டாமா' என்றார். அரசன் அக்கதை யாதென்று சேக்கிழாரிடம் கேட்டார்; சேக்கிழாரோ அது திருத்தொண்டர் புராணம் என்றார். ஆயின் கூறுக என்றார் மன்னர்; சேக்கிழார் சிதம்பரஞ்சென்று நடராசரைத் தரிசித்து பின்னர் திருத்தொண்டர் மாக்கதை பாடினார்.★★★

★★ திருநூற்றந்தாதி மூலமும் உரையும், மதுரை, 1935, பக் 1.

★★★ சைவ சமய வளர்ச்சி, சென்னை, 1972, பக் 239.

★★★ ஆ.சிங்கார வேலு முதலியார், அபிதான சிந்தாமணி, சென்னை, 1991, பக் 734.

கா. சுப்பிரமணிய பிள்ளை

இஃது(பெரிய புராணம்) ஐந்தாவது தமிழ் வேதமென்று பாவித்து பல சிறப்புக்கள் செய்யப்பட்டு, பசும் பட்டினாற் சுற்றி, பொறகலத்தில் வைத்து யானைமேல் எழுந்தருள்வித்து சிறப்புச் செய்தான் சோழ மன்னன்.★

பெரியபுராணம்

சிவனடியவர் மகாத்மியஞ் சொன்ன நூலான பெரியபுராணம் (திருத்தொண்டர் மாக்கதை, 12ஆம் திருமுறை) இரண்டு காண்டம், பதின்மூன்று சருக்கம் கொண்ட 4287 விருத்தச் செய்யுட்களால் அமைந்துள்ளது.

சேக்கிழார் தாம் அருளிய காப்பியத்துக்கு இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம். இதில் தனியடியார்கள் அறுபதின்மர்; திருக்கூட்டம் ஒன்பது; சுந்தர மூர்த்தி நாயனார் அவரது தந்தையாராகிய சடையனார், தாயாராகிய இசை ஞானியர் என்றும் மூவர் ஆகிய எழுபத்திரண்டுபேர் வரலாறுகள் கூறப்பட்டுள்ளன★★

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

'பெரியோர் வரலாற்றைக் கூறுவதாலும், ஓதுவோருக்குப் பேசரிய பெருமை சேர்ப்பதாலும், பிறவாயாக்கைப் பெரியோன் பெருமையை அப்பெரியோன் அடியார்க்கு எளியனாக எழுந்தருளிய அருமையில் எளிய பெருமையை எடுத்து விளக்குவதானாலும், முன்னும் பின்னும் இதனை யொத்த பெருநூல் தோன்றாமையாலும் பெரியபுராணம் என்று பாராட்டப் பெறுகிறது.

தமிழில் புராணங்கள் பல உண்டு. அவற்றில் சிறப்புடையனவும் உண்டு; சிறப்பில்லாதனவும் உண்டு. ஆனால், அந்த வரிசையில் பெரியபுராணம் வைத்து எண்ணத்தக்கதன்று. புராணம் என்று உலக வழக்கில் கூறினாலும் பெரியபுராணம் புனைந்துரைக்கப்பட்டதன்று. அஃதொரு வரலாற்று நூல்; வாழ்வாங்கு வாழ்ந்த சான்றோர்களின் சரிதநூல்; பக்திச்சுவை நலம் பாரிக்கும் பெருநூல்; இன்ப அன்பினை இடையறாது விளைவிக்கும் இன்தமிழ் மறை நூல்; ''திசையனைத்தின் பெருமையெல்லாம் தென்திசையே வென்றேறச் செய்த திருநூல்; ''அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்லத் தோன்றிய அரிய பெரிய அருள் நிறை விறல் நூல்''; தமிழ்

★ கா.சுப்பிரமணியபிள்ளை, சேக்கிழார் சுவாமிகள் சரித்திரமும் பெரியபுராண ஆராய்ச்சியும், சென்னை, 1954, பக் 74.

★★ ''கூட்டம் ஒன்பானொடு அறுபத்து மூன்று தனிப்பெயரா
ஈட்டும்பெருந்தவத்தோர்எழுபத்திரண்டாம்'' - திருத்தொண்டர்திருவந்தாதி செய்யுள் - 87.

மொழியின், ''இசை முழுதும் மெய்யறிவும்'' கொண்டு விளங்கும் முழுமுதல்நூல். தமிழ் நாட்டிற்கும், தமிழ் மொழிக்கும், தமிழினத்திற்கும் தனிப் பேரரணாக அமைந்ததோடன்றி, ஆக்கமும் வழங்கிய செஞ்சொற்காப்பிய நூல் பெரியபுராணம் என்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் புகழ்ந்துரைப்பர்.★

ந. சஞ்சீவி

இளங்கோ அடிகளின் அரசியல் சார்பும், திருத்தக்கதேவரின் தவநெறியும் சேக்கிழார் அடிகளிடம் இணைந்திருந்ததும் இப்பெருங் காப்பியம் பிறக்கக் காரணமாதல் வேண்டும். சிலப்பதிகாரம் 5001 அடிகள்; சீவகசிந்தாமணி 12,616 அடிகள், பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப்பாடிய பெரிய காப்பியமோ 17148 அடிகள். இவ்வகையிலும் இம்முப்பெருங் காப்பியங்கட்கு இடையே உள்ள வளர்ச்சியை எண்ணி இன்புறலாம்; வாழ்த்தலாம் என்பர் டாக்டர் ந. சஞ்சீவி.★★

பெரிய புராண ஆராய்ச்சி

தமிழ் இனக்காப்பியம், தமிழ்நாட்டுத் தலைமக்கள் காப்பியம், சிவஅரசில்-செந்நெறிக் குடியரசில்-குடி-குல-பால் வேற்றுமை ஏதும் இல்லை என்று எடுத்துக் காட்டும் ஒரு பெருந்தமிழ்க்காப்பியம் பெரியபுராணம்.

மகாதேவ முதலியார்

இதனை 1924களில் முதன் முதலில் ஆய்வு செய்து 159 பக்க அளவில், 'பெரிய புராண ஆராய்ச்சி' எனும் நூல் எழுதியவர் மகோதேவ முதலியார். இவர் கி.பி. 1871-இல் பிறந்தவர்; தமிழாசிரியர். இவரது ஆய்வால் இலக்கிய ஆராய்ச்சிக்குப் பயன்படும் குறிப்புகள் பல கிடைத்தது. அவரது பெரிய புராணத் திறனாய்வை நோக்கும் போது பெருவியப்பும், பேரின்பமும் பெருகுகிறது.

சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார்

1928களில் தமிழறிஞர் கா.சு.பிள்ளை 'சேக்கிழார் சுவாமிகள் சரித்திரமும், பெரியபுராண ஆராய்ச்சியும் எனும் 154 பக்கங்களைக் கொண்ட அறிய நூலினை வெளியிட்டார்கள்.

1930-களில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் பச்சையப்பர் கல்லூரியில் சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் சேக்கிழார் எனும் தலைப்பில் நிகழ்த்திய அரிய பெரும் மூன்று ஆராய்ச்சி உரைகளின் பயனாக, அது 1933-ஆம் ஆண்டில் 246 பக்க அளவில் நூலாக வெளியானது.

★ சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பொன்விழா மாநாட்டில், டிசம்பர் 1970-இல் ஆற்றிய தலைமைப் பேருரையிலிருந்து...

★★ பெரியபுராணப் பெருங்காப்பியப் பெருங்கவிதை எனும் கட்டுரையில் 1970.

மகாதேவ முதலியாரின் பெரியபுராண ஆராய்ச்சி கன்னி முயற்சி; கா.சு.பிள்ளையின் அதனைத் தொடர்ந்த முயற்சி; சி.கே.சுப்பிரமணிய முதலியாரின் சேக்கிழார் ஆராய்ச்சி கன்னிநிலை கழிந்த காதல் முயற்சி, யாழ்ப்பாணத்து சு. சிவபாத சுந்தரமும், ச. சச்சிதானந்தம் பிள்ளையும் மதிப்புரை தந்து போற்றிய முயற்சியாகும்.

டாக்டர் இராசமாணிக்கனார்

மகாதேவரையும், கா.சு.பிள்ளையும், சிவக்கவிமணியையும் பின்பற்றி வித்வான் மா.இராமணிக்கம் (தன் இல்லத்தின் பெயரையே சேக்கிழார் அகம் என்று ஆக்கிக்கொண்டவர்) கி.பி. 1941-ஆம் ஆண்டு முதல் பெரியபுராண ஆராய்ச்சியில் ஈடுபட்டார். தனது M.O.L. பட்டத்திற்காகத் தயாரித்த ஆங்கில ஆராய்ச்சி நூலின் ஒரு பகுதியான 'சேக்கிழார்' என்னும் நூலினை 1945-இல் வெளியிட்டார். 1948-இல் 'பெரியபுராண ஆராய்ச்சி' எனும் நூலையும் வெளியிட்டார்.

சேக்கிழார் செம்மணித்திரள்

கோயமுத்தூரில் சேக்கிழார் நிலையம் என்று தன் இல்லத்தை அமைத்துக் கொண்டவர். C.K. சுப்பிரமணிய முதலியார்; திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் அருண்மொழித் தேவர் என்னும் சேக்கிழார் சுவாமிகள் அருளியது, என்று குறிப்பிட்டு, பகுதிகளாக, (5) அதிலும் பல பாகங்களாகத் தொடர்ந்து கோவைத் தமிழ்ச் சங்கத்தின் மூலம் வெளியிட்டு வந்தார்.★

முத்தாய்ப்பாக கி.பி. 1960-இல், 'சேக்கிழார் செம்மணித்திரள்' எனும் நூலை, வெளியிட்டார். எளியவர்க்கும் இரங்கி அடிகளார் அருளிய இவ் உதவிக்குத் தமிழுலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது. இந்த அருட்கொடை, பெரியபுராணத்திற்காகவே வாழ்க்கையை உரிமைப்படுத்தி உதவிய அவரது அருஞ்செயலை எவரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

ம. பாலசுப்பிரமணிய முதலியார்

சமாஜத்தின் பெரிய புராணப்பதிப்பில் திரு.ம.பாலசுப்பிரமணிய முதலியார் தொகுத்திருக்கும் 'அரும்பொருளகராதி' பெரிய புராண ஆராய்ச்சிக்கு ஒளிகாட்டி, வழிகாட்டுவதாகும். முன்னோர் செய்த முயற்சிகளைக் களவாடித் தம் முயற்சி போல் நடிக்கும் கற்பு வாழாது.

★ திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் கோவைத் தமிழ்ச் சங்கம் வெளியீடு, மூன்றாம் பகுதி, இரண்டாம் பாகம் 23-3-1946 இல் C.K. சுப்பிரமணிய முதலியார் எழுதிய முன்னுரை பக் V, VIII.

அதனாலேயே பெரிய புராணப் பெருங்காப்பியப் பெருங்கவிதையில், வாழ்க்கை நெறி குறித்து எழுதப்புகுமுன் அது குறித்த ஆராய்ச்சி வரலாற்றின் சிறு துளிகளைச் சொல்ல வேண்டியது அவசியமாயிற்று. இது தொடர்ந்து எண்ணற்ற அறிஞர் பெருமக்கள், பெரிய புராணத்தினை பல்வேறு கோணங்களில் ஆய்ந்து போற்றித் தெளிந்துரைத்துள்ளனர்; சிலர் இடித்துரைத்தும் உள்ளனர்.

அறுபத்து மூன்று நாயன்மார்கள்

'தென்னிந்தியாவில் தமிழ் மொழியில் சங்ககாலத்திய நூல்களாகிய பழையதும் இன்றுமுள்ளவாகிய இலக்கியங்களில் சிவனாரைப் பற்றியும், அவருக்குச் செய்யப்படும் வழிபாடு பற்றியும் குறிப்புக்கள் உள்ளன. சைவ சமயத்தின் சிறந்த காலமாவது அறுபத்து மூன்று அடியாரென்றும், அல்லது நாயன்மாரென்றும் அழைக்கப்படும். திருத்தொண்டத் தொகையில் வகைப் படுத்தப் பெற்ற அடியார்கள் வாழ்ந்து சிவபெருமானுக்கு அன்பு செய்யும் முறைமையைக் காட்டிய காலமேயாகும்' என்பர் டி.எம்.பி. மஹாதேவன்.★

வரலாற்றுச்சுருக்கம்

எனவே, 'பெரிய புராணத்தில் வாழ்க்கை நெறி' எனும் விஷயங்களுக்கு வருவதற்குமுன், அதில் கூறப்படும் அறுபத்து மூவர் ஊர், மரபு, தொண்டு, காலம், வரலாற்றுச் சுருக்கம் ஆகியவைகளைச் சுருக்கமாக தெரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது. ஏனெனில் நாயன்மார்களது வாழ்க்கை வரலாற்றுச்சுருக்கமே; அவர்கள் வாழ்ந்து காட்டிய முறைகளே, பெரியபுராணத்தில் வாழ்க்கை நெறிகளாக அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

அறுபத்து மூவர் ஊர்-மரபு-தொண்டு-காலம்

1. அதிபத்தர்-பரதவர் -நாகப்பட்டினம் (சோ)-முதல் மீன் நாளும் சிவனுக்கு விட்டவர்; ஒரே மீன் கிடைத்த பொழுது அதனைச் சிவனுக்கு விட்டுப் பட்டினி கிடந்தவர்; பொன் மீன் ஒன்றே கிடைத்த அன்றும் அதனைச் சிவனுக்கு விட்ட சிறந்த பக்தர். கி.பி.660-840.
2. அப்பூதியார்-பிராமணர்-திங்களூர் (சோ)-அப்பரையே தெய்வமெனக் கொண்டவர்; இறந்த மகனை மறைத்து அப்பருக்கு உணவு படைத்தவர். கி.பி. 600-660.
3. அமர்நீதியார்-வணிகர்-பழையாறை (சோ) சிவபிரான் தந்த கோவணச் சண்டை; மனைவி மகனோடு துலைபுக்கவர்; அப்பர்க்கு முற்பட்டவர்; பாடல் பெற்றவர். கி.பி. 400-600.

★ சைவ சித்தாந்தம் கட்டுரையில், கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருள் இயல் வரலாறு, தொகுதி 1, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1970, பக் 683.

4. அரிவாள் தாயர் -வேளாளர்-கணமங்கலம்(சோ) - பிரசாதம் கால் இடறிக் கீழே விழத் தம் தலையை அரிய முயன்றார்; உடனே லிங்கத்திலிருந்து கைவந்து தடுத்தது; அப்பரால் பாடப்பெற்றவர். கி.பி. 400-600.

5. ஆனாயநாயனார் - இடையர் - மங்கலவூர் (சோ) - பஞ்சாட்சரத்தை 7 - சுரங்கள் பொருந்தக் குழலில் வாசித்தவர். கி.பி. 660-840.

6. இசைஞானியார்-ஆதிசைவர்-திருநாவலூர் (ந) - சுந்தரர் தாயார்; சிவனடியார். கி.பி. 840-865.

7. இடங்கழியார் - சிற்றரசர் - கொடும்பாளூர் (சோ) - ஆலயப்பூசனைகள் நடத்தினார்; நெல் திருட வந்த அடியார்க்கு வழங்கினார்; பலர்க்கும் தம் உடைமையெல்லாம் வழங்கினார். கி.பி. 600-840.

8. இயற்பகையார் - வணிகர்-புகார் (சோ) - சிவனுக்கு மனைவியைத் தரத் துணிந்தவர்; எதிர்த்த உறவினரைக் கொன்றவர். கி.பி. 660-840.

9. இளையான்குடி மாறர் - வேளாளர் - இளையான்குடி (சோ) - விதையைக் குற்றிச் சமைத்து சிவனடியாரை உண்பித்தவர். கி.பி. 660-840.

10. உருத்திர பசுபதியார் - பிராமணர்- திருத்தலையூர் (சோ) - கழுத்தளவு நீரில் நின்று உருத்திர மந்திரம் செபித்தவர். கி.பி. 660-840.

11. எறிபத்த நாயனார் - மரபு கூறப்படவில்லை - கருவூர் (சோ) - புகழ்ச்சோழர் யானையைக் கொன்றவர். கி.பி. 400-600.

12. ஏயர்கோன் கலிக்காமர்-வேளாளர் -பெருமங்கலம் (சோ) - ஏயர் தலைவர்; சோழர் சேனைத் தலைவர்; சுந்தரரை வெறுத்தவர்; அவரைப் பார்க்க மறுத்து தம்மை மாய்த்துக் கொண்டவர்; சுந்தரரால் எழுப்பப் பெற்றவர். கி.பி. 840-865.

13. ஏனாதிநாதர்-சான்றார்-எயினனூர்(சோ)-வாள்வித்தை பயிற்றுவிப்பவர்; அவரைப் பகைவனான அதிசூரன் நீறுபூசி வந்து கொன்றான். கி.பி.660-840.

14. ஐயடிகள் காடவர்கோன்-பல்லவ அரசர்-காஞ்சீபுரம் (தொ) -பல நாடுகளையும் வென்றார்; சைவத்தைப் பரப்பினார்; அரசை வெறுத்துத் தலங்களைத் தரிசித்து வெண்பாப் பாடினார்; 11ஆம் திருமுறையில் உள்ள 'க்ஷேத்திர வெண்பா'க்கள் இவர் பாடியன. கி.பி. 400-600.

15. கணநாதர்-பிராமணர்-சீகாழி (சோ) - சைவ சமயப் பணிகட்கு ஆள்களைத் தயாரித்தவர்; சம்பந்தரைப் பூசித்துப் பேறு பெற்றவர். கி.பி.600-660.

16. கணம்புல்ல நாயனார்-மரபு கூறப்படவில்லை-இருக்கு வேளூர் (சோ) - விளக்கெறித்தவர்; கணம்புல்லை அறுத்து விற்று எண்ணெய் வாங்கி விளக்கு எரித்தவர்;அப்பரால் புகழப்பட்டவர். கி.பி. 400-660.

17. கண்ணப்பர்-வேடர்- (தொ) -கண்ணை இடந்து அப்பியவர்;அப்பரால் புகழப்பட்டவர். கி.பி. 400-600.

18. கலிக்கம்பர்-வணிகர்-பெண்ணாகடம் (ந) -வேலையாள் காலைக் கழுவ, நீர் வார்க்கத் தாமதித்த மனைவியின் கையை வெட்டினவர் - கி.பி. 660-840.

19. கலிய நாயனார்-வாணியர்-திருவொற்றியூர் (தொ) விளக்கெரித்தவர்; மனைவியை விற்கத் துணிந்தவர்; உதிரத்தால் விளக்கு எரிக்கத் தலை அறுக்கச் சிவனால் ஆட்கொள்ளப்பட்டவர். கி.பி. 660-840.

20. கழற்சிங்க நாயனார் பல்லவ அரசர்-காஞ்சிபுரம் (தொ) - சிவத்தலங்கள் தோறும் மனைவியோடு சென்று தரிசித்துத் திருப்பணி செய்தவர் - இவர் மனைவி திருவாரூரில் பூ முகந்ததால் செருத்துணை நாயர் மூக்கரிந்தார்; இவர் உடனே மனைவியின் கையை வெட்டினார். கி.பி. 840-865.

21. காரி நாயனார்-மரபு குறிக்கப்படவில்லை (பிராமணர்)? - திருக்கடவூர் (சோ) - கோவைபாடி மூவேந்தரிடமும் சென்று பொருள் பெற்றுக் கோவில் கட்டியவர். கி.பி. 660-840.

22. காரைக்கால் அம்மையார்-வணிகர்-காரைக்கால் (சோ) - பேய்வடிவம் கொண்டவர்; (1) மூத்த திருப்பதிகம் (2) இரட்டை மணிமாலை (3) அற்புதத் திருவந்தாதி முதலியன பாடியவர் (11-ஆம் திருமுறை); சம்பந்தாற் பாடப்பட்டவர். கி.பி. 400-600.

23. குங்குலியக் கலயர்-பிராமணர்-திருக்கடவூர் (சோ) - தாலிவிற்றுக் குங்குலியப்பணி செய்தவர்; சிவனால் அளப்பருஞ் செல்வம் பெற்றவர். திருப்பனந்தாளில் சாய்ந்திருந்த லிங்கத்தைத் தாமே இழுத்து நிறுத்தியவர்; சோழன் மதிப்பைப் பெற்றவர், சம்பந்தர்க்கு விருந்தளித்தவர். கி.பி. 600-660.

24. குலச்சிறையார்-மரபு கூறப்படவில்லை-மணமேற்குடி (பா) -அடியாரை ஆதரித்தவர்; பாண்டியன் மந்திரி; சம்பந்தரை வரவழைத்துப் பாண்டியனைச் சைவர் ஆக்கினவர். கி.பி. 640-680.

25. கூற்றுவ நாயனார்-அரசர்-களந்தை (சோ) - பல அரசர் நாடுகளைக் கவர்ந்து ஆண்டவர்; பஞ்சாட்சரம் உச்சரித்தவர்; இறைவனால் முடி சூடப்பெற்றவர்; முடிசூட மறுத்த தீட்சிதர் அஞ்சிச் சேரநாடு சென்றார். கலப்பிரர் காலம். கி.பி. 400-600.

26. கோச்செங்கட்சோழர்-சோழ அரசர்-சிதம்பரம் (சோ) - சிவனருள் பெற்றவர்; பேரரசர்; கோவில்கள் கட்டியவர்; தீட்சிதர்க்கு மாளிகைகள் கட்டியவர்; அப்பர்-சம்பந்தராற் பாடப்பட்டவர். கி.பி. 400-600.

27. கோட்புலி நாயனார்-வேளாளர்; சோழர் சேனாதிபதி-திரு நாட்டியத்தான்குடி (சோ) - சிவனடியார்க்கென வைத்திருந்த நெல்லை, உறவினர் காவலில் விட்டுப் பகைவரோடு போராடச் சென்றார். உறவினர் நெல்லைத் தின்றுவிட்டனர். அவர் அனைவரையும் நாயனார் கொன்றார்; அவர் புதல்வியரைச் சுந்தரர் புதல்வியாக ஏற்றார் - சுந்தரர் காலத்தவர். கி.பி. 840-865.

28. சடைய நாயனார்-ஆதி சைவர்-திருநாவலூர் (ந) - சுந்தரர் தகப்பனார். கி.பி.840-865.

29. சண்டேசுவரர்-பிராமணர்-திருச்சேய்ஞலூர் (சோ) -மணல்லிங்கத்திற்குப் பால் அபிஷேகம் செய்தவர்; தந்தை காலை வெட்டியவர்; அப்பர், சம்பந்தரால் புகழப்பட்டவர். கி.பி.400-600.

30. சத்தி நாயனார்-வேளாளர்-விரிஞ்சியூர் (சோ) - சிவனடியாரை இகழ்பவரை நாவறுத்தவர். கி.பி. 600-840.

31. சாக்கிய நாயனார்-வேளாளர்-சங்கமங்கை (சோ) -காஞ்சி சென்று பல சமயங்களை ஆராய்ந்தவர்; பௌத்த வேடத்துடனே; சிவலிங்க வழிபாடு செய்தவர்; கல்லெறிந்து வழிபட்டவர். கி.பி 400-600.

32. சிறப்புலி நாயனார்-பிராமணர்-திருஆக்கூர் (சோ) - பஞ்சாட்சரம் செபித்தவர்-யாகம் செய்தவர். கி.பி. 660-840.

33. சிறுத்தொண்டர்-(மாமாத்தியர்)-திருவெண்காடு (சோ) - பல்லவர் சேனைத் தலைவர்; அடியார் உபசரணையில் சேர்ந்தவர்; பிள்ளைக்கறி சமைத்துப் பைரவர்க்குப் படைத்தவர்; வாதாபியை வென்றவர்; சம்பந்தர் காலத்தவர். கி.பி. 600-660.

34. சுந்தரமூர்த்தியார்-ஆதிசைவர்-திருநாவலூர் (ந) - கோவிலில் மணம் செய்தவர்; இரு பெண்களை மணந்தவர்; தலங்கள் தோறும் சென்று பாடியவர். கி.பி. 840-865.

35. செருத்துணையார்-வேளாளர்-ஆலூர் (சோ) - கழற்சிங்க நாயனார் மனைவியின் மூக்கரிந்தவர். கி.பி. 840-865.

36. சேரமான் பெருமாள் - அரசர்-கொடுங்கோளூர் (சேர) - பல தலங்களைத் தரிசித்தவர்; சுந்தரரோடு கயிலை சென்றவர்; பாணபத்திரற்குப் பொன் தந்தவர்; (1) பொன் வண்ணத்து அந்தாதி (2) மும்மணிக்கோவை (3) திருக்கயிலாய ஞானவுலாப் பாடினவர். கி.பி. 840-865.

37. சோமாசி மாறர்-பிராமணர்-திருவம்பர் (சோ) - சாதிபேதம் காணாதவர்; வேத விதிப்படி யாகம் செய்தவர்;சுந்தரரைப் பூசித்தவர். கி.பி.840-865.

38. தண்டியடிகள்-மரபு கூறப்படவில்லை-திருவாரூர் (சோ) - குளம் வெட்டல் முதலிய தொண்டுகள் செய்தவர்; சமணரோடு வாதிட்டுக் கண் பெற்றவர்; சமணரைத் திருவாரூரில் இருந்து விரட்டினார்; சமணப் பாழிகளை அழித்துக் குளம் கட்டினார்; நமிநந்தி அடிகள் காலத்தவர்; அரசர் முன் சமணர் வாது கூறினார். கி.பி. 400-600.

39. திருக்குறிப்புத் தொண்டர்-வண்ணார்-காஞ்சீபுரம் (தொ) - சிவனால் ஆட்கொள்ளப்பட்டவர்; மழையால் அடியாரது ஆடை காய முடியாததால் பாறையில் தம் தலையை மோதச் சிவனார் தடுத்து ஆசிர்வதித்தார். கி.பி.660-840.

40. திருஞான சம்பந்தர்-பிராமணர்-சீகாழி (சோ) - சமணரை வென்றவர்; பாண்டியனைச் சைவனாக்கினவர். தோற்ற சமணர் கழுவேறினர். கி.பி.600-660.

41. திருநாவுக்கரசர்-வேளாளர்-திருவாமூர் (தொ) - தொண்டை நாட்டைத் தூய்மைப்படுத்தியவர்; பல்லவனைச் சைவனாக்கினவர். கி.பி. 600-660.

42. திருநாளைப்போவார்-பறையர்-ஆதனூர் (சோ) - தோல், வார் முதலியன கோவிலுக்கு உதவியவர்; பல தலங்களைத் தரிசித்தவர்; சிதம்பரதரிசனம் கண்டவர்; எரிமூழ்கிப் புகழ் உடம்பு பெற்றவர். கி.பி. 660-840.

43. திருநீலகண்டர்-குயவர்-சிதம்பரம் (சோ) - சிவன் திருவோட்டுச் சண்டை; தொண்டர் பரத்தையிடம் போனதால் உண்டான ஊடல் சிவனால் தீர்க்கப்பெற்றவர். கி.பி.660-840.

44. திருநீலகண்டர் யாழ்ப்பாணர்-பாணர்-எருக்கத்தம்புலியூர் (தொ) - பல தலங்களைத் தரிசித்தவர்; பஞ்சாட்சரத்தை யாழிலே வாசித்தவர்; மதுரையில் சிவகட்டளையால் திருமுன் சென்றவர்; பொற்பலகையில் இருந்து யாழ் வாசித்தவர்; சம்பந்தர் காலத்தவர். கி.பி. 600-660.

45. திருநீலநக்க நாயனார்-பிராமணர்-சாத்தமங்கை (சோ) - லிங்கத்தின் மீது விழுந்த சிலந்தியை ஊதிய மனைவியைத் துறந்தவர்; மறுநாள் கடவுள் கட்டளையின்படி மனைவியைச் சேர்த்துக் கொண்டவர்; சம்பந்தர் காலத்தவர்;சம்பந்தர் மணத்தில் சோதியிற் கலந்தவர். கி.பி. 600-660.

46. திருமூலர்-மரபு கூறப்படவில்லை-வடநாடு-'மூலன்' என்னும் இடையன் உடம்பிற்புகுந்தவர்; தமிழ் கற்றுத் 'திருமந்திரம்' பாடியவர். கி.பி. 400-600.

47. நமிநந்தி அடிகள்-பிராமணர்-ஏமப்பேரூர் (சோ) - விளக்கெரித்தவர்; சமணர் பரிகசித்ததால் சிவனருள் பெற்று விளக்கெரித்தார்; தண்டி அடிகள் காலத்தவர்; கோவில் திருப்பணி செய்து வாழ்ந்தவர்; அப்பரால் பாடப்பெற்றவர். கி.பி.400-600.

48. நரசிங்க முனை அரையர்-சிற்றரசர்-திருநாவலூர் (ந) சுந்தரரை வளர்த்தவர்; சிவநெறி தழைக்க ஆண்டவர்; தூர்த்த வேடரான அடியார்க்குப் பொன்னும் உணவும் தந்தவர்; சுந்தரர் காலத்தவர். கி.பி.840-865.

49. நெடுமாற நாயனார்-பாண்டிய அரசர்-மதுரை (பா) சமணர், சம்பந்தர் மடத்தைக் கொளுத்த இசைந்தவர்; பின் சைவரானார்; பல தலங்களைத் தரிசித்தவர். கி.பி. 600-660.

50. நேச நாயனார்-சாலியர்-காம்பீலி-அடியார்க்குப் பலவகை ஆடைகளை நெய்து கொடுத்தவர். கி.பி. 660-840.

51. புகழ்ச்சோழர்-பேரரசர்-உறையூர் (சோ) - கொங்கர் குடகர் திறை கட்ட ஆண்டவர்; பகைவர் தலைகளுள் சிறிய சடையுடைய தலை கண்டு, தம் வீரர் சிவனடியார் ஒருவரைக் கொன்றதாக எண்ணி வருந்தி நெருப்பிலே விழுந்தவர். கி.பி. 400-600.

52. புகழ்ச்சோழர்-பேரரசர்-உறையூர் (சோ)-கொங்கர் குடகர் திறை கட்ட ஆண்டவர்; பகைவர் தலைகளுள் சிறிய சடையுடைய தலை கண்டு, தம் வீரர் சிவனடியார் ஒருவரைக் கொன்றதாக எண்ணி வருந்தி நெருப்பிலே விழுந்தவர். கி.பி. 400-600.

53. பூசலார் நாயனார்-பிராமணர்-திருநின்றவூர் (தொ) - மனத்தால் கோயில் கட்டினவர்; கயிலாசநாதர் கோவில் கட்டிய இராஜசிம்மன் காலத்தவர். கி.பி. 685-720.

54. பெருமிழலைக்குறும்பர்-சிற்றரசர்-(குறும்பர்)-பெருமிழலை (சோ) - பஞ்சாட்சரத்தை ஜபித்தவர்; சுந்தரர் காலத்தவர்; சுந்தரர்க்கு முன் யோக முயற்சியால் உடலை விட்டுக் கயிலை சென்றவர். கி.பி. 840-865.

55. மங்கையர்க்கரசியார்-இராணியார்-மதுரை (பா) - சோழன் மகளார்; கணவனைச் சைவன் ஆக்கினவர்; சம்பந்தர் காலத்தவர். கி.பி. 600-630.

56. மானக்கஞ்சாறர்-வேளாளர் (சேனாதிபதி)-கஞ்சாறு (சோ)-பரம்பரைச் சேனாதிபதி; ஏயர்கோன் மாமனார்-தம் ஒரே மகளான மணப்பெண் கூந்தலைச் சிவனடியார் கேட்க அரிந்தீந்தவர். கி.பி. 840-865.

57. முருக நாயனார்-பிரமாணர்-திருப்புகலூர் (சோ)-பூமாலைகள் தொடுத்தவர்; சம்பந்தர் திருமணத்தில் சோதியிற்கலந்தவர். கி.பி.600-660.

58. முனையடுவார்-வேளாளர்-திருநீடூர் (சோ) தோற்றவர்க்காகப் போரிட்டுப் பணம் பெற்றுச் சிவன் அடியார்க்கு உதவி வந்தவர் - கி.பி.660-840.

9. மூர்க்க நாயனார்-வேளாளர்-திருவேற்காடு (தொ)-மகேசுவர பூசை செய்தவர்; சூதாடி அடியார் சேவை செய்தார்; சூதிலே மறுத்தவரைக் கத்தியால் குத்தினார். கி.பி. 660-840.

0. மூர்த்தி நாயனார்-வணிகர்-மதுரை (பா) -சந்தனக் காப்புச் செய்தவர்; பாண்டியனைக் கருநாடக (களப்பிர) அரசன் வென்று மதுரையை ஆண்டான்; சமண மன்னன்; மூர்த்தியார்க்குச் சந்தனம் கிடைக்காதபடி செய்தான்; மூர்த்தியார், கையையே சந்தனக்கல்மீது தேய்த்தார்; கை தேய்ந்தது; மூளை வந்தது. அரசன் இறக்க, வணிகர் சிவ. வேடத்துடன் அரசர் ஆனார்-களப்பிரர் காலம். கி.பி.400-600.

51. மெய்ப்பொருள் நாயனார்-சிற்றரசர்-திருக்கோவலூர் (ந) - முத்திநாதன் அடியார் வேடத்தில் வந்து இவரைக் கொன்றான். கி.பி. 660-840.

52. வாயிலார் நாயனார்-வேளாளர்-மயிலாப்பூர் (தொ) - உள்ளத்தைக் கோயிலாக்கி மானத பூசை செய்தவர். கி.பி. 660-840.

3. விறல்மிண்ட நாயனார்-வேளாளர்-செங்குன்றூர் (சே)- அடியார்களை வணங்குபவர்; அவர்களோடு இருந்தவர்; பல தலங்களைத் தரிசித்தவர்; சுந்தரரைத் தொகைபாடச் செய்தவர்.

அறுபத்து மூவர் - பல்வகைத் தொண்டர்

கோயில் தொண்டு செய்தவர்கள்

மூர்த்தி நாயனார்	-	சந்தனக்காப்பு.
நமிநந்தி அடிகள்	-	விளக்கெரிப்பு.
கூற்றுவ நாயனார்	-	பூசைகள் நடத்தினவர்.
கணம்புல்ல நாயனார்	-	விளக்கெரிப்பு.
முருக நாயனார்	-	பூமாலை கட்டியவர்.
திருநாளைப்போவார் நாயனார்	-	தோலும் வாரும் நரம்பும் கோரோசனை (ஓர் மருந்து)யும் கொடுத்து வந்தவர்; நந்தியை விலகச் செய்தவர்; தீ மூழ்கியவர்.

பாடிப் பதம் பெற்றவர்

நீலகண்ட யாழ்ப்பாணர்	-	யாழ் வாசித்துப் பாடினார்; மதுரைக் கோவிலுள் சிவனார் கட்டளைப்படி நுழைந்தவர்.
ஆனாய நாயனார்	-	குழல் வாசித்து முத்தி பெற்றவர்; பஞ்சாட்சரத்தைக் (சிவநாமாக் கரம் ஐந்து)

குழலில் வாசித்தவர்; சிவனால் ஆட்கொள்ளப்பட்டவர்.

மனக்கோயில் கட்டியவர்கள்

பூசலார் நாயனார்	-	மனத்தால் கோவில் கட்டியவர்.
வாயிலால் நாயனார்	-	மனக்கோயிலில் வழிபட்டவர்.

மந்திரம் செபித்த அடியார்கள்

உத்திர பசுபதியார்	-	கழுத்தளவு நீரில் நின்று உருத்திர மந்திரம் செபித்தவர்.
சிறப்புலி நாயனார்	-	பஞ்சாட்சரம் ஓதினவர்; யாகம் செய்தவர்.
சோமாசி மாறர்	-	பஞ்சாட்சரம் ஓதினவர்; சிவனடியாரை ஆதரித்தவர்.
திருமூலர்	-	திருமந்திரம் பாடியவர்.

அடியார்க்குத் தொண்டு செய்தவர்கள்

அப்பூதி அடிகள்	-	அப்பரை வழிபட்டவர்.
கணநாத நாயனார்	-	சம்பந்தரை வழிபட்டவர்.
புகழ்த்துணை நாயனார்	-	பொற்காசு பெற்றுத்தொண்டு செய்தவர்.
இடங்கழி நாயனார்	-	நெல் தந்து அடியார்க்கு உதவியவர்.
நேச நாயனார்	-	அடியார்க்கு ஆடை நெய்து தந்தவர்.
நரசிங்க முனையரையர்	-	அடியார்க்கு அன்னமிட்டவர்.
பெருமிழலைக் குறும்பர்	-	அடியார்க்கு அன்னமிட்டவர்.
		சுந்தரரை வழிபட்டவர்; அவருக்கு முன் கயிலை சென்றவர்
சடையனார்	-	சிறந்த அடியவர்
இசை ஞானியார்	-	சிறந்த அடியவர்
கூற்றுவ நாயனார்	-	சிறந்த அடியவர்

சமணரோடு போரிட்டவர்கள்

மூர்த்தி நாயனார்	-	எலும்பும் தேயச் சந்தனம் அரைத்தவர்; சந்தனக் காப்பு; சமணர் துன்பம்; வட அரசன் தடை; அவன் இறக்க, இவர் அரசர் ஆனார்; இவரால் சைவம் பரவியது.
நமிநந்தி அடிகள்	-	சமணர் 'நீரால் விளக்கெரி' என்றதும்

		அங்ஙனமே செய்து, சமணர் வாயை அடக்கியவர்.
தண்டி அடிகள் (கண் இல்லாதவர்)	-	குளம் வெட்ட முயற்சி; சமணர் பரிகசிப்பு; கண் பெற்றுச் சமணரைத் திருவாரூரில் இருந்து விரட்டியவர்.
அப்பர்	-	சமணராலும் மகேந்திரவர்மனாலும் பல துன்பங்கட்கு ஆளானவர்.
சம்பந்தர்	-	சமணரை வாதிட்டுத் தோற்கடித்தவர்.
மங்கையர்க்கரசியர்	-	சம்பந்தர்க்கு உதவி செய்தவர்.
குலச்சிறை நாயனார்	-	சம்பந்தர்க்கு உதவி செய்தவர்.

கோவில் கட்டிய அடியார்கள்

கோச்செங்கட்சோழர்	-	பல கோவில்களைக் கட்டியவர்; சிதம்பரம் கோவிலைக் கட்டியவர்; தீட்சிதரை வரவழைத்து மாளிகை கட்டித் தந்தவர்.
காரி நாயனார்	-	மூவேந்தர் மீது கோவை பாடிப்பணம் பெற்றுக் கோயில்கள் கட்டியவர்.

தலங்களைத் தரிசித்தவர்களும் பாடினவர்களும்

கரைக்கால் அம்மையார்	-	சிவனைப் பாடிக் கயிலாயம் சென்றவர்; பாடியவர்.
ஐயடிகள் காடவர்கோன்	-	பல தளிகள் தரிசித்து வெண்பாக்களைப் பாடியவர்: தமிழிலும் வடமொழியிலும் வல்லவர்.
கழற்சிங்க நாயனார்	-	பல தளிகளில் தொண்டு செய்தவர்; மனைவியர் கையை வெட்டியவர்.
அப்பர்	-	பல தலங்களைத் தரிசித்துத் திருமுறைகள் பாடியவர்.
சம்பந்தர்	-	,,
யாழ்ப்பாணர்	-	,,
சுந்தரர்	-	,,
சேரமான் பெருமாள் நாயனார்	-	,,

விறல் மிண்டர் - பல தலங்கள் தரிசித்து அடியாருடன் இருந்தார்; திருத்தொண்டத்தொகை பாடத் தூண்டியவர் (பாடாதவர்).

சிவ வேடத்திற்கு மதிப்பீந்து இறந்தவர்கள்

மெய்ப்பொருள் நாயனார் - பகைவன் முத்தநாதன் அடியாராக வந்து குத்திக் கொன்றான்.

ஏனாதி நாயனார் - பகைவன் அதிசூரன் விபூதி அணிந்து வந்து கொன்றான்.

செயற்கரிய செய்தவர்கள்

கண்ணப்ப நாயனார் - கண்ணிடந்து அப்பினவர்

புகழ்சோழ நாயனார் - பகைவர் தலைகளுள் ஒன்று அடியார் தலைஎனக்கண்டதும்தீயில்வீழ்ந்துஇறந்தார்.

சிறுத்தொண்ட நாயனார் - மகனை அறுத்து அமுது படைத்தவர்.

குங்கலியக் கலய நாயனார் - தாலி விற்றுக் குங்குலியம் வாங்கியவர்; சாய்ந்த லிங்கத்தை நிமிர்த்தியவர்.

திருநீலநக்க நாயனார் - லிங்கத்தின் மீது விழுந்த சிலந்தியை அப்புறப்படுத்திய மனைவி அசூயை செய்தனள் என்று அவளைத் துறந்து, பின் கடவுள் கூற அவளை ஏற்றார்; சம்பந்தரோடு சோதியிற்கலந்தவர்.

கலிய நாயனார் - திருவிளக்குப் பணி செய்தவர்; மனைவியை விற்க முனைந்தார்; உதிரத்தால் விளக்கு எரித்தார்.

சண்டேச நாயனார் - மணலைப் பிடித்து லிங்கமாக வழிப்பட்டவர்; தந்தை காலை வெட்டியவர்.

கழற்சிங்க நாயனார் - திருவாரூரில் தம் மனைவி பூ மோந்ததால் செருத்துணை நாயனார் மூக்கரிய, இவர் அவள் கையை வெட்டினார்.

அடிவாட்டாயர் (அரிவாள் தாய நாயனார்) - பிரசாதம் சிந்திப்போகக் கழுத்தை அரிய முயன்றவர். அவர் கையைச் சிவனார் பற்றிக் கொண்டார்.

கலிக்கம்ப நாயனார்	-	வேலையாள் பாதம் துலக்க நீர் விடத் தாமதித்த மனைவியின் கையை வெட்டியவர்.
கோட்புலி நாயனார்	-	சிவநெல்லைத் தின்றதற்காக உறவினரைக் கொன்றவர்; வாளோடு கயிலை சென்றவர்.

சிவபிரானால் சோதிக்கப் பெற்றவர்கள்

இயற்பகை நாயனார்	-	மனைவியை அடியவருடன் அனுப்பியவர்; தடுத்த உறவினரைக் கொன்றவர்.
திருநீலகண்ட நாயனார்	-	திருவோட்டுச் சண்டை; மனைவியையும் இவரையும் சிவனார் கூட்டுவித்தார்.
இளையான்குடி மாற நாயனார்	-	விதைத்ததைக் குற்றி வீட்டு உத்திரம் முதலியன கொண்டு சமைத்தவர்.
அமர்நீதி நாயனார்	-	கோவணச் சண்டை - தராசில் அவர், மனைவி, மகன் ஏறி நின்றனர்.
திருக்குறிப்புத் தொண்டர்	-	அடியார் தந்த ஆடையை மழையால் மாலையில் உணர்த்திக் கொணரச் கூடாமையின் உயிரை மாய்க்க முயன்றவர்; சிவனார் அவரைப் பிடித்துக் காப்பாற்றினார்.
அதிபத்த நாயனார்	-	முதல் மீன் சிவனுக்கென விட்டவர்; மீனே கிடைக்காமல் ஒரு பொன் மீனே முதலில் கிடைக்க அதையும் சிவனுக்கே விட்டவர்.
மானக்கஞ்சாறர்	-	ஏயர்கோன் மாமனார்; ஒரே மகள் கூந்தலை அடியவர்க்கு அறுத்துக் கொடுத்தவர்.
ஏயர்கோன் கலிக்காம நாயனார்	-	சூலைநோயால் வருந்திச் சுந்தரரைக் காண மறுத்துத் தற்கொலை செய்து கொள்ள முயன்றவர்; இறுதியில் சுந்தரரால் நோய் நீங்கப் பெற்று இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றவர்.

அழுத்தமான சைப்பற்றுடையவர்கள்

எறிபத்த நாயனார்	- புகழ்ச்சோழர் யானை மாலையை அறுக்க, அதனைக் கொன்றவர்; பாகர் முதலியவரையும் கொன்றவர்.
சத்தி நாயனார்	- சிவனடியாரை இகழ்பவரின் நாவை அறுத்தவர்.
மூர்க்க நாயனார்	- சூதாடிப் பெற்ற பொருளைச் சிவனடியாருக்கு அமுதளிக்க உதவினார்; சூதாட்டத்தில் தவறான ஆட்டம் ஆடுபவரைக் குத்துபவர், மூர்க்கர்.
சாக்கிய நாயனார்	- புத்தர்-காஞ்சி சென்று பல மதங்களைச் சோதித்துச் சைவராகிக் கல்லால் அர்சித்து முத்தி பெற்றவர்.
நந்தனார்	- நந்தி விலகச் செய்தவர்; சிதம்பரத்தைத் தரிசித்தவர்.
முனையடுவார் நாயனார்	- போர் செய்து வந்த பணத்தைக் கொண்டு சிவன் அடியார்க்கு உணவு படைத்தவர். ★

பெரிய புராணத்தில் வாழ்க்கை நெறி

சைவ மதம்

சைவம் என்பது சிவசம்பந்தம் என்றும், சிவபெருமானை வழிபடுவோர்களென்றுமாம்; இவர்கள் விபூதி உருத்திராக்க காவியாதிகளை★ யணிந்து, வேதாகம நெறியே வழிபட்டிருப்பவர்கள் சிவனடியார்கள்; அறுபத்தி மூவரும் வேதாகமநெறிப்படி வாழ்ந்தவர்கள்.

இவர்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை நெறியினை பெரியபுராணம் பல்வேறு கோணங்களில் தெளிவாகச் சொல்லிச் செல்கிறது.

வாழ்க்கை

'வரு முன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு-போலக் கெடும்' (குறள் 435)

என்ற திருவள்ளுவர், இல்வாழ்க்கை அதிகாரத்தில் 'பொருள் சேர்க்கும் போது பழிக்கு அஞ்சிச் சேர்த்துச், செலவு செய்யும் போது பகுத்து உண்பதை மேற்கொண்டால், அவ்வாழ்க்கையின் ஒழுங்கு எப்போதும் குறைவதில்லை' என்றும் வலியுறுத்துவார்.

★ டாக்டர் மா. இராசமாணிக்கனார், பெரிய புராண ஆராய்ச்சி, சென்னை, 1990, பக் 229-240.

நெறி

'நெறியைந்து மோங்க' (திருவாலவாயுடையார் திருப்பணி மாலை 28, 34)

'மதநெறி மாதை வேட்பான்' (திருவாலவாயுடையார் திருப்பணி மாலை 4, 24)

'நெறி கொள் வரிக்குடர்' (புறநானூறு 160)

தமிழ் இலக்கியங்களிலும், பக்தி இலக்கியங்களிலும் நெறி எனும் சொல், ஒழுங்கு, சன்மார்க்கம், கற்பு, நீதிமுறை, வழி, விதம் எனும் பொருள்களில் பேசப்படுகிறது. பெரிய புராணம் காட்டும் வாழ்க்கை நெறிகள் இதோ....

உரிமைச் செல்வம்

தில்லை வாழ் அந்தணர் தம் புராணம் முதல் இசைஞானியார் புராணம் ஈறாகப் பேசப்படுகின்ற அறுபத்து மூன்று தனியடியார்களும், ஒன்பது தொகையடியார்களும் ஆக எழுபத்திரண்டு புராணங்களுடைய சேர்க்கையாக இருப்பது பெரிய புராணம். 'ஒழியாப் பெருமைச்...' எனத் துவங்கும் ஒரே பாடலில் அருளிச் செய்திருக்கிற இசை ஞானியார் புராணத்தில் கூட, அந்நாட்டு மக்கள் 'உரிமைச் செல்வம்' உடையவர்களாக வளம் பொருந்தி விளங்கினார்கள் என்று நாட்டுச் சிறப்பையும், மக்கள் வாழுகின்ற மனைகள் எல்லாம் திருவதியும் பெருமனைகளாகத் திகழ்ந்தன என்பதனை அருளிச் செய்திருப்பதினால் நகரச் சிறப்பும் சேக்கிழார் வாயிலாக அறிய முடிகிறது.★★

கல்வி தொடங்குதல்

குழந்தை பிறந்த மூன்றாவது ஆண்டில் மயிர் நீக்கிக் கல்வி தொடங்குதல் வழக்கம். பிராமணராயின் பூணூற் சடங்கு செய்த பிறகே கல்வி தொடங்கப் பெறும். கல்வி, நற்பொருள்களை வெள்ளம் போலப் பெருக உதவி- அறிவு விளங்கச் செய்தலால் மனம் சுருண்டிருந்த நிலையை நீக்கி மலரச் செய்யும் இயல்புடையது என்று பெரிய புராணம் கல்வி தொடங்குதல் குறித்து அறிவிக்கிறது.

'வந்து வளர் மூவாண்டின் மயிர்வினைமங் கலஞ் செய்து
தந்தையாரும் பயத்த தாயாருந் தனிச்சிறுவர்
சிந்தை மலர் சொற்றெளிவிற் செழுங் கலைகள் பயிலத்தம்
❒ *பந்தமற வந்தவரைப் பள்ளியினி லிருந்தினார்'*★★★

❒ பந்தமற - பிறவிப்பிணி ஒழிய

★ பிரபஞ்ச உற்பத்தி, பக் 538.

★★ தவத்திரு சுந்தரசுவாமிகள், ஆதீன கர்த்தர், சிரவணபுரம் கௌமார மடாலயம், கோயம்முத்தூர், பெரியபுராணத்தில் கவிநலம், தமிழாய்வு, தொகுதி-8, சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, 1978, பக்.3

★★★ சிறுத்தொண்ட நாயனார் புராணம் பாடல் 22.

குழந்தைகள் இலக்கியக் கல்வியும் சிவம் முயன்றடையும் தெய்வக் கலைகள் பலவும் கற்றனர்.★ வேதம், சிவாகமம், வேதாந்தம், புராணம், இதிகாசம் ஆயுர் வேதம் முதலியனவும் பயின்றனர்.★★

பொதுக் கல்வியும், சமயக் கல்வியும், மருத்துவம் வானநூற்கலை முதலிய பல்கலைக் கல்வியும் மக்கள் கற்றனர் என்பதனை சேக்கிழார் தெளிவாகத் தெரிவித்துள்ளார்.★★★

தொழிற் கல்வி

நாட்டுச் சிறப்புப் பாடல் 18-இல், புரவித் தொழில், யானைத் தொழில், தேர்த்தொழில், வில், வாள் முதலிய படைக்கலத் தொழில்கள் உள்ளிட்ட தொழிற்கல்வி விவரஞ் சொல்லப்பட்டுள்ளது. இத்தொழில்களில் இயற்பகையார், ஏனாதிநாதர், கோட்புலியார் முதலியோர் சிறந்திருந்ததை பெரியபுராணம் அறிவிக்கிறது. சத்திநாயனார் கத்தி வைத்திருந்ததும், எறிபத்தநாயனார் கோடாரி வைத்திருந்ததும் அக்காலத்து அடியார்கள் ஆயுதப் பயிற்சியிலும் வல்லவர்கள் என்பதனை அறிவிக்கிறது.

பெண்கள் கல்வி

ஆண்களைப் போலவே பெண்களும் கல்வி கற்றிருந்தனர் என்பதற்கு, காரைக்காலம்மையாரே ஏற்ற சான்றாவர். இவரது பாடல்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் இருத்தலும், சோழர் காலத்து மாளிகை மாடத்து ஆசாரியரிடம் மாணவி ஒருத்தி சமயக் கல்வி பயின்றனள் என்பதும், பெண்களும் சமய சாத்திரப் பயிற்சியுடையவராயிருந்தனர் என்பதை உணர்த்துகின்றன. திலகவதியார், மங்கையர்க்கரசியார், செம்பியன் மாதேவியார் போன்ற சைவத் தாய்மார்கள் சைவ சித்தாந்த உண்மைகளை அறிந்திருந்தனர் என்பது உண்மையாகும்.★★★★

பெண்கள் விளையாட்டு

தடுத்தாட்கொண்ட புராணத்தில், பெண்கள் அம்மானை, பந்தாட்டம் முதலிய பலவகை விளையாட்டுக்கள் விளையாடி, சிவனைப் பற்றிய பாடல்களைப் பாடினர் என்பது தெளிவாகிறது★★★★★

★ திருத்தொண்டர்மாக்காதை, நாட்டுச்சிறப்பு, பாடல் 18.

★★ சி.கே. சுப்பிரமணிய முதலியார், பெரிய புராண ஆராய்ச்சி பக் 124.

★★★ சி.கே. சுப்பிரமணிய முதலியாரின் 'சேக்கிழார்' நூல் காண்க.

★★★★ டாக்டர். மா.இராசமாணிக்கனார், சைவ சமய வளர்ச்சி, சென்னை, 1972 பக் 279.

★★★★★ தடுத்தாட் கொண்ட புராணம், பாடல் 135.

திருமணம்

மணமகன் வீட்டார்கள் சில பெரியோரைப் பெண்ணைப் பெற்றவர்களிடம் அனுப்பி, 'இன்ன மகனுக்கு அம்மகளைத் தருதல் வேண்டும்' என்று கேட்பர். இதனைத் திலகவதியார், சம்பந்தர், சுந்தரர், ஏயர்கோன் கலிக்காமர் திருமணங்களிற் காணலாம்.★

இருதிறத்தாரும் மணமக்களின் குலம், கோத்திரம், குணம் இவற்றை ஆராய்ந்த பிறகே திருமணத்திற்கு ஒருப்படுவர்.

'முன்னாக வொத்த குல முதல் வேளாண்குடித்தலைவர்'
'குணம் பேசிக் குலம் பேசிக் கோதில் சீர்ப்பு கழனார்...'
'பணங்கோளர வகலல்குற்பைந் தொடியை மணநேர்ந்தார்'.★★

செம்புலப் பெயல் நீர் போல் அன்புடை நெஞ்சம் தாம் கலக்க வேண்டுமாயின், பெரியோர்களால் குலம், குணம் பேசி திருமணங்கள் நடைபெற்ற வாழ்க்கை நெறியினை பெரியபுராணம் அறிவிக்கிறது.

'மரபும், குலமும், குடியும், தொன்மையும் பொருந்துமாறு பற்றியே மகட்பேசி மணம் புரிதல் நமது முன்னோர் வழக்கு' என்பர் சி.கே. சுப்பிரமணிய முதலியார்.★★★ திருமணச் சடங்கு முறைகளை விவரிக்கின் பெருகும்;

கோவில்களில் திருமணம்

திருவாரூர்க் கோவிலில் பரவையாரையும், திருவொற்றியூர்க் கோவிலில் சங்கிலியாரையும் சுந்தரர் மணந்து கொண்டார்; கோவில்களில் திருமணம் நடைபெற்றமைக்கு இது சான்றாகும்; சைவப் பெண்மணியான மங்கையார்க்கரசியார், சமணனான பாண்டியன் நெடுமாறனை மணந்துக் கொண்டது. பரந்த நோக்கத்தைக் காட்டுகிறது.

மணவாழ்க்கை

மனைவி கணவனுக்குத் துணைவி; கணவன் மனைவிக்குத் துணைவன் என்பதனை சேரமான் பெருமான் நாயனார் புராணம் சுட்டிக் காட்டுகிறது★★★★

கணவன் மனைவியின் யோசனைப்படியே வீட்டுக் காரியங்களைச் செய்து வந்தான் என்பது சிறுத்தொண்டர், இளையான்குடி மாறர் இவர் தம் வாழ்க்கை நெறியால் அறியலாம்.

★ மானக்கஞ்சாற நாயனார் புராணம் பாடல்கள் 16, 18.

★★ பெரிய புராணம் பாடல்கள் 1287, 1289, 153, 154, 881, 1161.

★★★ திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம், 1946, கோவை பக் 824.

★★★★ சேரன்மான் பெருமான் நாயனார் புராணம் பாடல் 72.

கணவன் செய்யும் சிவத்தொண்டுக்கு மனைவி ஆதரவளித்தல் வழக்கம் என்பதற்கு நமிநந்தி அடிகள் வரலாறு சான்றாகும்.

கணவன் ஒழுக்கம் கெட்டவனாயின் மனைவி அவனை அறவே வெறுத்தாள் என்பது திருநீலகண்டர் வரலாறு தரும் செய்தியாகும்.

இல்லாளும் இல்லாளனும்

இல்லாள் என்ற சொல்லுக்கு நிகராக சேக்கிழார் தமக்கே உரிய தனிச்சிறப்புடன் 'இல்லாளன்' அகத்திருக்க என்று அருளிச் செய்கிறார். சிறுத்தொண்டரின் மனைவியைப் பற்றி கூற வந்த சேக்கிழார் 'மனைவி என்பவள் இல்லறம் என்றும் மரத்துக்கு வேராக விளங்குகின்றவள்;'என்று கூறுகிறார். இல்லாளன் என்று கணவனைக் குறிக்கும் சொல் சேக்கிழார் பெருமான் கையாண்டிருக்கும் மிகச் சிறப்புமிக்க ஒரு சொல் ஆகும்★

பொருத்தமற்ற மணவாழ்க்கை

பொருத்தமான உருவமில்லாது திருமணம் செய்யப்பெற்று பின்னர் மணமுறிவு ஏற்படுகின்ற நிகழ்வினைக்காட்ட காரைக்கால் அம்மையாருக்கும் பரமதத்தனுக்கும் இடையே உள்ள பொருத்தமின்மையைக் காட்டுகின்றார் சேக்கிழார் ★★

பெண்ணின் அடக்கம்

காரைக்கால் அம்மையார் பல்லக்கில் வருகின்றதை கேள்வியுற்ற பரமதத்தன் தன் மனைவி குழந்தைகளுடன் எதிர்கொண்டு வணங்குகிறான். காரைக்கால் அம்மையார் அச்சமோடு அடக்கமாக ஒதுங்கி சென்ற பாங்கினை சேக்கிழார் கூறுகிறார்.

'கணவர் தாம் வணங்கக் கண்ட காமர் பூங்கொடியனாரும்
அணைவுறுஞ் சுற்றத்தார் பாலச்சமோ டொதுங்கிநிற்ப'★★★

தமது கணவர் தம்மை வணங்கியது கண்ட அழகிய பூங்கொடி போன்ற புனிதவதி அம்மையாரும் பக்கத்தே பொருந்தி நின்ற சுற்றத்தார்களிடம் அச்சத்துடனே ஒதுங்கிநிற்க...' என்று C.K.சுப்பிரமணிய முதலியார் உரை தருவார். இங்கு பெண்ணின் நிறையை, அடக்கத்தின் உயர்ந்த பண்பினை, உன்னத வாழ்க்கை நெறியினைச் சேக்கிழார் இளங்கோ அடிகள் வழியில் நின்று போதித்துள்ளார்.

★ பெரியபுராணத்தில் சமுதாய நோக்கு, தவத்திரு சுந்தர சுவாமிகள், தமிழாய்வு தொகுதி 10, சென்னை, பக் 31.

★★ தருமபுரம் தட்சிணம் பிர்க்கா கட்டளை விசாரணை ஸ்ரீமத் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள், திருமுறையில் இல்லறம், 2001, பக்4.

★★★காரைக்காலம்மையார் புராணம், பாடல் 46.

கணவன் பெயரைக் கூறுதல்; கட்டளைக்கு கீழ்ப்படிதல்

அக்காலப் பெண்கள் அவசியம் நேரும்போது கணவரது பெயரைக் கூறிவந்தனர். இயற்பகை நாயனார் வரலாறு இதனை அறிவிக்கிறது★

கணவன் செயல் உலக இயற்கைக்கு மாறுபட்டதாயினும், சமயச் புடைய தாயினும் மனைவி மகிழ்ச்சியுடன் கணவன் கட்டளைக்கு கீழ்படிந்து நடந்தாள் என்பதற்கும் இயற்பகையாரின் மனைவியே சான்றாகிறார் ★★

பிள்ளைகளின் பெயர்கள்

சிறுத்தொண்டர் தாம் வழிபட்ட சீராளதேவர் பெயரையே தம் மைந்தர்க்கு இட்டார்; அப்பூதியடிகள் தமது ஆசாரியராகிய திருநாவுக்கரசர் பெயரையே தம் பிள்ளைக்கிட்டார். தங்கள் பிள்ளைகளுக்குத் தங்கள் விருப்பத் தெய்வங்களின் பெயர்களையோ, அல்லது தம் சமயப் பெரியவரின் பெயர்களையோ வைத்தல் மரபென்பது, பெரியபுராணம் காட்டும் வாழ்க்கை நெறியின் ஓர் அம்சமாகும்.

மூத்த திருநாவுக்கரசு

கருத்து ஒருமித்து வாழ்ந்த தம்பதிகட்குப் பிறந்த குழந்தையும், இறைத்தொண்டில் உறைந்த உள்ளமுடையவராய் இருந்தனர் என்பதற்கு அப்பூதியடிகளின் புதல்வர் மூத்த திருநாவுக்கரசு சான்றாவார்.

வாழை இலை அறுக்கச் சென்ற தன்னை அந்தப் பாம்பு தீண்டியதோடு கையினையும் சுற்றிக் கொண்டது. அப்போது தந்தை இட்ட கட்டளையை நிறைவேற்றும் எண்ணம் கொண்டவனாக 'சென்று கொடுப்பனென்னோடி வந்தான்' என்று சேக்கிழார் தந்தை சொல் தவறாத தனயனாக★★★ மூத்த திருநாவுக்கரசைக் காட்டும் வாழ்க்கை நெறியினை பெரியபுராணம் போதிக்கிறது.

பிள்ளைப் பேற்றுக்கு கடவுளை வணங்கல்

நாகனும் தத்தையும் முருகனை வழிபட்டுத் திண்ணனைப் பெற்றனர்★★★★ சிவபாத இருதயரும் பகவதியாரும் தவம்புரிந்து சம்பந்தரைப் பெற்றனர்★★★★★ சோழ அரசர் சுபதேவன் மனைவி பெருந்தேவி சிவன் அருளால் கோச்செங்கட்சோழன் பிறந்தார் ★★★★★★

★ இயற்பகை நாயனார் புராணம், பாடல் 16. ★★ முற் கூறியது, பாடல்கள், 8, 9.

★★★ அப்பூதியடிகள் நாயனார் புராணம், பாடல்கள் 24, 26.

★★★★ கண்ணப்ப நாயனார் புராணம் பாடல்கள் 10-12.

★★★★★ திருஞான சம்பந்தர் புராணம் பாடல்கள் 19-20.

★★★★★★ கோச்செங்கட் சோழநாயனார் புராணம் பாடல் 8.

கடவுள் அருளால் பிள்ளைப் பேறு அடையலாம் என்ற நெறிமுறை அக்காலத்தில் இருந்து வந்தது★

துன்பத்திலும் தூயபணி

'கணவனை இழந்தோர்க்கு காட்டுவது இல்' என்பது சிலப்பதிகார வாக்கு; ஏயர்கோன் கலிக்காம நாயனார் சுந்தரர் இறைவனைத் தூதராக ஏவினாரரென்று கோபித்து சூலைநோய் பெற்றார். சுந்தரரால் சூலை நோய் தீரும் என்பதற்கு இசையாது, உயிர்நீத்தார். (பின் இறைவனால் உயிர்பெற்றுச் சுந்தரர்க்கு நண்பரானார்)

கலிக்காமரின் மனைவியார் கணவருடன் இறக்கத் துணிந்தவர்; சுந்தரர் தம் கணவரைக் காண வருகிறார் என்றவுடன் சாவதை விடுத்து, கணவரை இழந்த நிலையில், தாம் அவரை வரவேற்றல் முறையன்று; ஆதலின், சுந்தரர்க்குத் தமது ஆட்களைக் கொண்டு சிறந்த வரவேற்பளித்தார் ★★

அடியார்க்குத் தொண்டு செய்தல்

இறையடியார்கள் எவ்வகை வேடத்தவராயினும் சரி, அவர்களை வரவேற்றுத் திருவடி துலக்கி, உள் அழைத்துச் சென்று இருக்கச் செய்து உணவு படைத்தலும், அவர் விரும்பியவை கொடுத்தலும் வழக்கம் என்பதனை பெரியபுராணம் வாழ்க்கை நெறியாக நமக்கு அறிவிக்கிறது. எந்தச் சாதியினர் ஆயினும், எந்தத் தொழில் புரிபவர் ஆயினும், தம்மால் முடிந்த அளவு அடியார்க்குத் தொண்டு செய்தனர். அடியார் கேட்டார் என்றவுடனே இயற்பகையார் தம் மனைவியை அவர் பால் ஒப்புவித்தாரல்லவா!

மாவிரதியார் கேட்டவுடன் தனது ஒரே மகளான அதுவும் மணப்பெண்ணின் கூந்தலை அறுத்துக் கொடுத்த மானக் கஞ்சாறர் பக்தியை என்னவென்பது! அக்கூந்தலை மணமுவந்தளித்த மணப்பெண்ணின்- கலிக்காமர் மனைவியாரின் அடியார் பக்தியை என்னவென்பது!

அமுது படைப்பவர் கடைப்பந்தியில்...

மாவிரதிகள், ஆண்டார், தவசிகள், சிவயோகியர், மாகேசுவரர் முதலிய பல திறப்பட்ட அடியார்களை உண்பித்தலே சிறந்த தொண்டாகக் கருதப்பட்டதுடன், அமுது படைப்பவர் கடைப்பந்தியில் உண்பது வழக்கமாக இருந்தது எனும் வாழ்க்கை நெறியினை (மூர்க்கநாயனார் வரலாறு) பெரியபுராணம் அறிவிக்கிறது★★★

★ அ. கேசவமூர்த்தி, பெரியபுராணம் புலப்படுத்தும், மணத்துக்குப் பின்னைய திருமண மரபுகள், ஆய்வுக் கோவை, தொகுதி 3, அண்ணாமலை நகர், 1982, பக் 132.

★★ ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம், பாடல்கள் 398-400.

★★★ மூர்க்கநாயனார் புராணம், பாடல் 10.

சிறுத்தொண்ட நாயனார்

'நல்ல மகனை, எடுத்துலகை வென்ற தந்தையார் தலையைப் பிடிக்க, விரைந்து மெய்த்தாயார் இனிய மழலைக் கிங்கிணிக்கால் இரண்டும் மடியின் புடையிருக்கிக் கனிவாய் மைந்தன் கையிரண்டும் கையாற பிடிக்க, நலனும், 'நனி நீடுவகையுறுகின்றார் என்று மகிழ்ந்து நகை செய்யத் தனிமா மகனைத் தாதையார் கருவி கொண்டு தலையரிந்து, இருவர் மணமும் பேருவகை எய்தி அரியவினை' செய்தார் சிறுத்தொண்டர்★

'செய்ய மணியே சீராளா, வாராய் சிவனாரடியார்யாம் உய்யும் வகையால் உடனுண்ண அழைக்கிறார்' என்று ஓலமிட்டார்கள். பள்ளியினின்று ஓடி வருவான் போல் சீராளன் வந்தான். ★★'சிவதொண்டர்த் அமுதுண்ணக் கூடியதாய் நாம உய்ந்தோம்' என மகிழ்ந்தனர். கபாலிகர் இருந்த இடத்திற்குச் சென்றனர். வைரவ வேடத்தில் வந்த அந்தப் பரமன் அங்கில்லை. திருவிளையாடலை ஆடிவிட்டு மறைந்து போனார் ★★★

உமக்கு நம்மிடமுள்ள உண்மையான பக்தியை உலகவர்க்குத் தெரிவிக்கும் பொருட்டே உம்மை இவ்வாறு நாம் பரிட்சித்தது. 'தொண்டனே! உன்னை இதுகாறும் சிறுத்தொண்டனென அறிந்துள்ளார் உலகவர்; இனிய பெரிய சிறுத்தொண்டனென உலகமெங்கும் வழங்கும் பொருட்டும் ஆசிர்வதிக்கிறோம்★★★★ என்று மிகமிகக் கடுமையான சோதனையையும் வென்று காட்டிய சிறுத்தொண்டரின் பக்திநெறியும் பெரியபுராணம் காட்டுகிற உயரிய வாழ்க்கை நெறியாகும். (இஸ்லாம் மார்க்கத்தில் நபி இப்ராஹிம் (அலை) அவர்கள் தமது புதல்வர் இஸ்மாயில் (அலை) அவர்களை இவ்வாறே அறுத்திட முயன்றதையும் ஒப்பிட்டு, சமயப் பொதுமையை எண்ணி மகிழலாம்)

அடியவரும் அரசனும்

அடியார்கள் அரசர்க்கு ஆகமம் படித்து விளக்கல் உண்டு. அதனைக் கூறும் அடியவர் ஆசனத்தின் மேலிருந்து கூறலும், கேட்டும் அரசன் தலைமீதிருந்து கேட்டலும் வழக்கமாகும். இதனை மெய்ப்பொருள் நாயனார் புராணம் வாயிலாக சேக்கிழார் அறிவிக்கிறார்★★★★★. அதோடு அடியார்கள் அரசரது பள்ளியறையுள்ளும் நுழையும் உரிமை பெற்றிருந்தனர்.

★ ஸ்ரீரெங்கநாத உபாத்தியாயர், சிறுத்தொண்ட நாயனார் இசை நாடகம், தஞ்சாவூர், 1990, பக் XXIX, XXX.

★★ சிறுத்தொண்ட நாயனார் புராணம், பாடல் 82

★★★ சோ. சிவபாத சுந்தரம், சேக்கிழார் அடிச்சுவட்டில், சென்னை, 1989, பக் 198.

★★★★ ராவ் சாஹெப், ப. சம்பந்த முதலியார், சிறுத் தொண்டர், சென்னை, 1922 பக் 45.

★★★★★ மெய்பொருநாயனார் புராணம், பாடல்கள் 12, 14.

சிவனடியார்கள் வேடத்தில் காணப்பட்ட பகைவர்களை வீரர்கள் எதிர்க்கவும் மாட்டார்கள் ★.

மெய்யடியார்களுக்கு, ஆளும் அரசனிடமும், மக்களிடமும் மிகுந்த மரியாதையும் செல்வாக்கு இருந்த நிலை, அடியவர்களைப் போற்றிக் கொண்டாடும் வாழ்க்கை நெறியாக பெரியபுராணத்தில் அமைந்துள்ளது.

அடியார்களும் ஐந்தெழுத்தும்

அடியார்கள் ஐந்தெழுத்தின் துணையை உறுதியாகப் பற்றியவர்கள். அமர்நீதியார் தராசில் ஏறிய பொழுதும்★★ ஆனாயர் குழல் இசைத்த பொழுதும்★★★ திருஞான சம்பந்தர் முத்துச்சிவிகையில் ஏறிய பொழுதும்★★★★ புகழ்ச் சோழ நாயனார் தீக்குளித்த போதும் ★★★★★ தண்டியடிகள் சமணர் முன் சபதம் கூறிக்குளத்தில் மூழ்கிய பொழுதும், சேரமான் பெருமாள் கயிலாயத்திற்குக் குதிரை மீது புறப்பட்ட போதும்★★★★★★★ ஐந்தெழுத் தோதினர். அடியார்கள் காலையில் துயில் நீத்தெழும் போதும், ஐந்தெழுத்தோதி எழுதல் மரபு என்பதனை சம்பந்தர் புராணம்(208) அறிவிக்கிறது. ஐந்தெழுத்தினை (சிவமந்திரத்தினை) அடியார்கள் ஓதுவதை வாழ்வில் நெறியாகக் கொண்டதை சேக்கிழார் தெளிவுபடுத்தியுள்ளார்.

கோவில் தொண்டுகள்

ஆகம முறைப்படி கட்டப்பட்ட கோவில்களில் வழிபாடு இன்றியமையாதது. அங்குத் தொண்டு புரிதலும் அடியார்கட்கு இயல்பான பணியாக அமைந்திருந்தது.

கோவிலைப் பெருக்குதல் (திரு அலகிடல்) பூசைக்குரிய மலர்களைப் பறித்தல், இண்டை, கண்ணி, தார் முதலிய பல வகை மாலைகளைத் தயாரித்தல், விளக்குகள் வைத்தல் முதலிய கோயிற் பணிகள் அடியார்களால் செய்யப் பட்டது. அப்பர் கோவில் தொண்டு செய்தவர். சங்கிலியார் இறைவனுக்குரிய மாலைகளைத் தொடுக்கும் பணியில் ஈடுபட்டவர் ★★★★★★★★

★ ஏனாதிநாத நாயனார் புராணம், பாடல்கள் 35-40.

★★ அமர் நீதி நாயனார் புராணம் பாடல்-43.

★★★ ஆனாய நாயனார் புராணம் பாடல்-22.

★★★★ திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் புராணம் பாடல்-216.

★★★★★ புகழ்ச் சோழ நாயனார் புராணம் பாடல்-39.

★★★★★★ தண்டியடிகள் நாயனார் புராணம் பாடல்-19.

★★★★★★★ வெள்ளானைச் சருக்கம் பாடல்-35.

★★★★★★★★ ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் பாடல் 223.

திலகவதியார் திருவலகு, திருமெழுக்கு, பூமாலைகட்டல் முதலிய பணிகளைச் செய்தவர். கோவில் கட்டுதல், நந்தவனம் அமைத்தல், கோவிலில் விளக்கெரித்தல், விழாக்கள் செய்தல், முதலிய திருப்பணிகள் புண்ணியம் தரும் சமயப் பணிகளாகக் கருதப்பட்டன.

பெரியபுராணங் காட்டும் வாழ்க்கை நெறியில், அக்காலமக்கள் தங்கள் உடல், பொருள், ஆவி என்னும் மூன்றையும் கோவில் தொண்டிலேயே வைத்திருந்தனர் என்று கூறுவதே பொருத்தமாகும்.

கோவிலில் வழிபாட்டு முறைகள்

கோவிலில் மக்களின் வழிபாட்டு முறைகளை விவரிக்கின் பெருகும்.

கோவிலில் கடவுளை முதலில் ஆடவர் அஷ்டாங்க வணக்கம் செய்வர். அஃதாவது இரண்டு கால்; இரண்டு கை; தலை; இரண்டு காதுகள், நெற்றி என்பன தலையிற் பொருந்துமாறு வணங்குவர். பின்னர் இரண்டு கைகளும் இரண்டு கால்களும் தலையும் தரையில் படும்படி 'பஞ்சாங்க' வணக்கம் செய்வர். பெண்கள் 'அஷ்டாங்க' வணக்கம் செய்யலாகாது. பஞ்சாங்க வணக்கம் செய்வர். கோவிலில் வேறெவரையும் வணங்கலாகாது. ஸ்தூபி முதலியவற்றின் நிழலை மிதித்தல் ஆகாது என்பது விதி என்பர் சி.கே.சுப்பிரமணிய முதலியார்★

சிவப்பொலிவு

பெரியபுராண வரலாறு பல்லவர் காலத்ததாயினும், நூலைப் பாடியவரான சேக்கிழார் சோழர் காலத்தவராதலால், அவர் செய்யுட்களில் சோழர் காலச் சமயநிலையையும், வழிபாட்டு முறைகளையும் அறிய இடமுண்டு; அவரே சிறந்த சைவ சமயப் புலவராதலின், அவர் பாக்களில் சிவப்பொலிவினைக் காணலாம் என்பர் மா. இராசமாணிக்கனார்.

சைவர் நம்பிக்கைகள்

முன்வினை இப்பிறவியிற்பலிக்கும்; இறைவன் அடியவர் அன்பினை அளக்கச் சோதனைகள் நிகழ்த்துவான். இறைவன் வேதங்கட்கும் உரியவன்; தமிழ் நூல்கட்கும் உரியவன்; அடியார்க்குக் கோளும் நாளும் தீயவும் நல்லவாம்; அடியார்கள் பிழைகளை இறைவன் மன்னிப்பான்; அடியார்க்கு எளியனாய் வந்து உதவுவான் என்பன சைவமக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகளிற் சிலவெனலாம்.

பெரியபுராண காலத்திற்குப் பின்னரே 63 நாயன்மார்கட்கும் சிற்பங்கள் ஏற்பட்டன; கோவில் தோறும் சிலைகள் ஏற்பட்டன; விழாக்களும் பெருகின.

★ பெரிய புராணம், தடுத்தாட்கொண்ட புராணம் பாடல் 126க்குத் தந்த உரையிலிருந்து...

மக்களின் சிந்தை இருள் போக்குதல்

'தொடர் நிலைச் செய்யுளால், ஒரு பழஞ்சரிதத்தைச் சொல்லுவதால், பெரிய உள்ளீடாகிய கற்பனையை எடுத்துக் காட்டுவதாயுள்ள ஒரு பெருங் காவியமான பெரியபுராணத்தின் ★ மூலம், மக்களின் சிந்தை இருள் போக்குதல், ஞானவொளி தருதல், இகத்தும் பரத்தும் இன்பமளித்தல், பேரின்ப முக்திக்கு உதவுதல் எனும் நான்கு நெறிகளைப்பாவும் ஊடுமாகத் தொண்டர்களின் வரலாற்று வழிப் பரவ விடுகின்றனர்★★

தமிழ்நாட்டுத் திருத்தலங்கள் மக்கள் வாழ்க்கை முறை ஆட்சி முறை, போர்கள், பஞ்சங்கள், நாணய முறை, ஊராட்சி முறை, சமுதாய வாழ்க்கை, சமயநிலை ஆகியவை பல்லவர்கால உண்மை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டவை என்பது டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் ஆராய்ச்சி முடிவாகும்.

அற வாழ்க்கை

பொருட்செல்வம் பெற்ற அடியார்கள் நல்ல வழிகளில் அப்பொருளை ஈட்டியவர்கள்; ஈட்டிய பொருளை அவர்கள் அறத்தை வளர்க்கவே பயன்படுத்தினர். அறத்தைத் தம் வாழ்க்கை நெறியாகவே கருதிப்போற்றினர். காலத்தையும் இடத்தையும் கடந்த நிலையில் செல்லும் வகையான் எல்லாம் பிறருக்கு உள்ளத்தாலும், உரையாலும், செயலாலும் நன்மை செய்வதையே அறத்தின் பொதுநிலை எனக்கொண்டு அடியார்கள் ஒழுகினர்.

மூர்த்தி நாயனார் தம் கையையே சந்தனக் கல் மீது தேய்த்து★★★ சந்தனக் காப்பினை இறைவனுக்கிடுவதில் இவருக்கிருந்த பற்றினைப் பார்க்க மெய் சிலிர்க்கும் அளவிற்கு இவர் தொண்டு, வாழ்க்கை நெறியாக அமைகிறது.

கனம்புல்ல நாயனார் விளக்கு எரித்திட, தம் திருமுடியை என்புருகமடுத் தெரித்தார். நமிநந்தி அடிகள் நாயனார் நீரால் விளக்கினை எரியச் செய்தார்.★★★★

கோவில்கள் அமைத்தல்

கோயில் கட்டுதல் மாபெரும் திருப்பணி என்பர்; கோயில் உள்ளத்தைப் பெருங் கோயிலாகக் கொண்டு மனத்தால் கட்டியவர் பூசலார் நாயனார்.

★சி.கே. சுப்பிரமணிய முதலியார், சேக்கிழார், சென்னை, 1954, பக் 34.

★★ டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், பெரியபுராணம் உலகிற்கு வழங்கும் செய்தி, தமிழாய்வு, சென்னை, தொகுதி 14, 1984-1990, பக் 145.

★★★ மூர்த்தி நாயனார் புராணம் பாடல்-9.

★★★★ நமிநந்தியடிகள் நாயனார் புராணம் பாடல் 14.

கோச்செங்கட்சோழர் சிதம்பரம் உள்ளிட்ட பல கோவில்களைக் கட்டியவர்.★காரிய நாயனார் மூவேந்தர்களிடமும் சென்று பொருள் பெற்றுக் கோயில் கட்டியவர். மனத்தாலும், தன் சொந்தப் பணத்தாலும், பிறர் தரும் உதவியாலும் கோவில்களை அமைக்கும் முறை பற்றிய செய்திகளை, சிவனடியார்கள் கொண்டிருந்த வாழ்க்கை நெறியாக பெரியபுராணம் தருகிறது.

வழிபாட்டுத் திறன்

இலிங்க வழிபாட்டு நிலையில் முப்பத்து மூவர்; குருவழிபாட்டு முறையில் பன்னிருவர்; அடியவர் வழிபாட்டு நெறியில் இருபதின்மரையும் பெரியபுராணம் எடுத்து நவில்கின்றது. இவர்களது நெறிகள் வேறுபடினும் இறுதியில் சென்று சேரும் முடிவிடம் ஒன்றாகவே இறையருள் தேடுதலாக அமைகின்றதைப் பார்க்க முடிகிறது.

சாதி ஒழிப்பு

வேளாளர் பதின் மூவரையும், ஆதி சைவர் நால்வரையும், அந்தணர் பன்னிருவரையும், வணிகர் ஐவரையும், இடையர் இருவரையும், நுளையர், சான்றார், வேடர், செக்கார், மாமாத்திரர், ஏகாலியர், புலையர், குயவர், பாணர், சாலியர் ஆகிய வகுப்பைச் சார்ந்தவர்களும், எறிபத்தர், கணம் புல்லர், காரியார், குலச்சிறையார், தண்டியடிகள், பெருமிழலைக் குறும்பர், ஆகியோர் மரபு தெரியாமலும் இருப்பதைப் பெரிய புராணத்தில் காண்கிறோம். இப்பகுப்புக்கள் ஆற்றிய தொழிலின் அடிப்படையில் அமைந்ததென்பது தெளிவாகும். 'சாதிப்பிரிவினையும், உடனுண்ணலும்' எனும் தலைப்பில் சிவக்கவிமணி காட்டுஞ் சான்றுகள் நயஞ்சான்றவை★★ அன்புடைத் திருக்கட்டமாகிய அடியார்களிடையே தீண்டாமை என்பது இல்லாதிருந்தது. இன்னார், இன்ன குலத்தார் என்ற பாகுபாடில்லாமல் எல்லோரும் ஒருங்கிணைந்து திருவிழா எடுத்ததும், இறைவழி பாடாற்றியதும் பெரிய புராணம் காட்டும் வாழ்க்கை நெறியாகும்.

பேசுந்திறம்

அப்பூதியடிகளின் தண்ணீர்பந்தரில் இருந்தவரை நோக்கித் திருநாவுக்கரசர், 'அவர் எவ்விடத்தார்? என்று மட்டுமே கேட்டார். அதற்கு 'துன்றிய நூல்மார்பர்! இத்தொல்பதியார்! மனையின் கண் சென்றார் இப்பொழுது! அதுவும் செய்த்தன்று! நணித்து' என்று பதில் தந்தார்.★★★

★ கோச்செங்கட் சோழநாயனார் புராணம் 16.

★★ சி.கே. சுப்பிரமணிய முதலியார், சேக்கிழார், பக் 88-90.

★★★ தவத்திரு சுந்தர சுவாமிகள், பெரிய புராண்த்தில் கவிநலம், தமிழாய்வு தொகுதி, 8, சென்னை, 1978, பக் 20-21.

'அமைந்த பூணூலை அணிந்த மார்பைப் பெற்ற அப்பூதியடிகள் நாயனாரும் இந்தப் பழைய சிவத்தலமாகிய திங்களூரில் வாழ்கிறவர்; அவர் தம்முடைய திருமாளிகைக்கு இப்போது தான் போனார் அந்தத் திருமாளிகையும் நெடுந்தூரத்தில் இருப்பது அன்று சமீபத்தில் தான் உள்ளது என்று பதில் தந்தார்.★ எப்படிப் பேசவேண்டும்? ஒரு காரியத்தை எப்படிச் செய்ய வேண்டும் என்பதையெல்லாம் தெளிவாகப் புரியும்படி கூறியிருப்பது, வாழ்க்கை நெறியாகக் காட்டியிருப்பது சேக்கிழார் பெருமானுடைய தனிச் சிறப்பாகும்.

அந்தணர் ஆதிக்கம்

பெரியபுராணத்தில் அடியார்களைச் சோதிக்க இறைவன் எழுந்தருளுகின்ற போதும், அடியார் குறை போக்க வருகின்ற போதும் அந்தணர் கோலத்தோடு தான் வருவதாகக் காட்டுகின்றார் சேக்கிழார். எனவே நாயன்மார் வாழ்க்கை வரலாற்றில் அந்தணர் ஆதிக்கம் செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்பது புலனாகிறது.★★

கொடுத்த வாக்கைக் காப்பாற்றல்

கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாவிடின் உயிரை விடத் துணிந்த பண்பாளர் அன்று வாழ்ந்தனர் என்பதைத் திருக்குறிப்புத் தொண்டர் மூலம் அறியமுடிகிறது.

தாயகப் பற்று

தாய்நாட்டுப் பற்றினால் தம் திருமணத்தையும் தம் அரசனின் பகைவரை வீழ்த்துவதற்காகத் துறந்து திருமணத்தை முடிக்காமலேயே யுத்தக்களத்திற்குப் புறப்பட்டுச் சென்ற உயர் பண்பைக் கலிப்பகையாரின் வாழ்க்கை நெறியால் உணரமுடிகிறது.

தமிழ்ப்பற்று

இசையுடன் தமிழையும் சமயத்தையும் கலந்த பண்புநெறி அன்றிருந்தது என்பதனைச் சம்பந்தர் புராணம் அறிவிக்கிறது. பாண்டிய நாட்டில் தமிழும் சைவமும் இரு கண்களாகப் போற்றப்பட்டன என்பதனை மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் மூலம் அறியலாம்.

★ வாகீச கலாநிதி, கி.வா.ஜகந்நாதன், பெரியபுராணவிளக்கம், பகுதி, 9 சென்னை, 1991, பக் 153.

★★ இரா.காசிராசன், பெரியபுராணமும் அந்தணர் ஆதிக்கமும், ஆய்வுக்கோவை தொகுதி 1, 1976, பக் 92-93.

ஒழுக்கநெறி

அழகை வெறுக்கும் மனப்பக்குவம் பெண்டிர்க்கு இருந்தது என்பதைப் புனிதவதி நிரூபிக்கிறார். கண்ணால் காணாமலே ஒழுக்க நெறியில் உயர்ந்தவர்களை விரும்பிப் போற்றும் மரியாதைப் பண்பை அப்பூதியடிகளின் வாழ்க்கை நெறியாக அறியமுடிகிறது.★

தீயோர் உதவி தேவையன்று

இறைவனை அவமதித்தவர்களால் உயிரைக் காப்பாற்றும் அளவில் உதவி கிடைப்பினும் வேண்டாம் என்று மறுத்த பண்புநெறியை ஏயர்கோன் கலிக்காமர் வாழ்க்கை முறை தெளிவாக்குகிறது.

'பழி எனின் உலகு ஆட்சி பெறினும் வேண்டாம்' எனும் நெறி கொண்ட பண்பாளர்கள் பெரியபுராணம் காட்டும் சமுதாயத்தில் வாழ்ந்தனர்.

செய்நன்றி மறவாப் பண்பு

சேக்கிழாரை ஆதரித்தவர் அநபாயச் சோழன். அறுபத்து மூன்று நாயன்மார்களையும், ஒன்பது தொகையடியார்களையும், தமிழ்நாட்டு வளப்பத்தையும் இன்பந்திளைக்கப்பாடிய சேக்கிழார் தம் மன்னனாகிய அநாபயன் குறித்து ''கொற்றவன் அநபாயன் பொற்குடைநிழற் குளிர்வதென்றால் மற்ற தன் பெருமை நம்மால் வரம்புற விளம்பலாமோ★★ என்று பாடி அநாபயன் பெருமையை விளம்பல் இயலாது என்கிறார்; இது நன்றி கலந்த பண்பாடு; செய்நன்றி மறவாப் பண்பினைப் போதிக்கும் வாழ்க்கை நெறியாகும்.

மன்னுயிரைத் தன்னுயிராகக் கருதும் பண்பு

ஒருவன் பசுவைக் கோலால் அடித்ததைக் கண்ட விசாரசருமர் தடுத்தார்; அன்று முதல் தாமே பசுக்களை மேய்க்கலானார். இது எவ்வுயிரையும் தன்னுயிர் போல நேசிக்கும் பண்பிற்குச் சான்றாக பெரிய புராணங் காட்டுகிறது.

சட்ட நுணுக்கங்கள் வழி

இன்றையச் சட்டநடைமுறைகளின் பல கூறுகளைப் பெரியபுராணத்தின் வழி அறிய முடிகிறது. சுந்தரர் மீது இறைவன் தொடுத்த

★ காமாட்சி முத்து மாறன், பெரியபுராணத்தில் பண்பாடு, ஆய்வுக்கோவை, தொகுதி 1, 1989, பக் 229.

★★ பெரிய புராணம் பாடல் 701.

வழக்கினைத் *'தடுத்தாட்கொண்டபுராணம்'* அடிப்படையாகக் கொண்டிருப்பதால் அதிலுள்ள சட்ட முறைகள் இக்காலச் சட்டநடைமுறைகளோடு ஒத்துப் போகிறது.

வாதி, எதிர்வாதி, வாதம் நடைபெறும் முறை, வழக்கினை மெய்ப்பிக்கும் பொறுப்பு (Burden of Proof) சான்று (Evidence)கரணத்தான், நீதி மன்ற எல்லை, மறு விசாரணை (புத்தூரிலிருந்து திருவெண்ணெய் நல்லூருக்கு மாற்றப்பட்ட தல்லவா) ஆகிய இன்றையச் சட்ட நடைமுறைகள் தடுத்தாட்கொண்டபுராணத்தில் வரும் நடைமுறைகளோடு ஒத்துப் போகின்றன.★

வெற்றிலை போடும் பழக்கம்

பெரிய புராணத்தில் வெற்றிலை குறித்து சேக்கிழார் பாடியுள்ளார்.

"தூங்க விலைக் கதலிப் புதன் மீது தொடங்கிப் போய்த்
தங்கிய பாசடை சூழ்கொடியூடு"★★

பாசடை, தாம்பூலம்,அடையக்காயமுது ஆகியவை வெற்றிலையின் மறு பெயர்களாகும். சிறப்புநாட்களிலும், கோயில்களிலும், வீடுகளிலும் வெற்றிலையைப் பயன்படுத்துவர்★★★ வெற்றிலையுடன் பாக்குமிட்டு சுவைத்ததை, தாம்பூலம் என்ற பெயரில் அழைக்கப்பட்ட அந்தப் பழக்கம், பெரிய புராணத்தில் வாழ்க்கை முறையில் ஓர் அங்கமாகவும் அமைந்திருக்கக் காண்கிறோம்.

அணிகலன்கள்

தலை முதல் பாதம் வரை பத்து வகை அணிகலன்களையும் அணிந்திருந்த பழக்கத்தினையும் பெரியபுராணத்தில் காணமுடிகிறது.

சொல் நாகரிகம்

சுந்தரர் சங்கிலியை விட்டுப் பிரிந்து திருவொற்றியூரைத் தாண்டித் திருவாரூர்க்குப் புறப்பட்டார். சங்கிலியை விட்டுப் பிரியேன் என்று கொடுத்த வாக்கை மீறியதால் அவரது கண் பார்வை போயிற்று. சொல் நாகரிகத்தின் தன்மை இவ்வாறு வலியுறுத்தப்படுகிறது.

★ காவேரி ஆவுடையப்பன், இன்றையச் சட்ட நுணுக்கங்கள் வழி தடுத்தாட்கொண்டபுராணம், ஆய்வுக் கோவை, 1989, பக் 234-239.

★★ பெரிய புராணம், பாடல் 929.

★★★ த. இராசேசுவரி, பெரியபுராணத்தில் தாவரங்கள், ஆய்வு மலர், தொகுதி 1, நாகர்கோவில், 1972, பக் 255, 256.

மரியாதை நாகரிகம்

கலிக்கம்பரின் மனைவி முன்னாள் தன் வேலையாள் ஒருவர் சிவனடியாராக வந்தபொழுது மரியாதை தராததால் தம் மனைவியின் கையைத் துணிந்தார் கலிக்கம்பர். மரியாதை செலுத்தும் மரபு இவ்வாறு வற்புறுத்தப்படுகிறது.

பணிவு

மதப் பெரியோர் வாழ்ந்த இடத்தை மிதிக்க அஞ்சி, சுந்தரர் அப்பர் வாழ்ந்த இடமான திருவதிகையை மிதிக்காமல் சித்த வடத்திலேயே தங்கினார். பெரியோரைப் பணியும் பேரறம் இவ்வாறு பேசப்படுகிறது. இது போன்ற பல நிகழ்ச்சிகளால், பெரிய புராணத்தில் வாழ்க்கை நெறியாக, அக நாகரிகம் புலப்படுகின்றது.★

திருந்தி வாழ்வது

மனிதன் தவறு செய்வது இயல்பு; அதனைத் திருத்திக் கொண்டு நல்ல மனிதனாக வாழ்வதே சிறப்பு என்பதனை அறிவிக்கவே திருநீலகண்ட நாயனார் வரலாற்றைச் சேக்கிழார் சொல்கிறார் எனலாம்.

எந்த நிலையிலும் தன் கொள்கையான விருந்து போற்றுவதிலிருந்து பின் வாங்கக் கூடாது என்பதனை இறையான்குடி மாறனார் வரலாற்றின் மூலம். தெரிவிக்கிறார்.

ஆசையிலே அமிழ்ந்து விடாதிருப்பது!

மனிதன் ஆசையிலேயே அமிழ்ந்து விடக்கூடாது என்பதனைச் சுந்தரமூர்த்தி நாயனார் வரலாற்றால் நமக்குக் காட்டுகிறார். இவ்வாறாக ஒவ்வொரு நாயன்மார் வரலாற்றிலும் உள்ளுறையாக ஒவ்வோர் உலக உண்மைகளை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார் சேக்கிழார்.★★

★ காமாட்சி முத்துமாறன், பெரியபுராணங் காட்டும் நாகரிகம், ஆய்வுக் கோவை, தொகுதி 1, 1988, அண்ணாமலை நகர் பக் 284, 285.

★★ மை.அ. கிருட்டிணன், சேக்கிழாரின் வாழ்க்கைத் தத்துவங்கள், ஆய்வுக் கோவை, தொகுதி 1, 1977, பக் 152, 153.

★★★ பெரியபுராணம், திருஞான சம்பந்தர் புராணம் பாடல் 1087.

கொள்கைச் சத்தியம்

மதிசூடும் அண்ணலார் தமை அமுது செய்வித்தல் ஒன்றே போதுமானது என்றும் அதுவே சைவத்தின் தனிமுதற் கொள்கை என்றும் இஃது உலகில் வாழும் அனைத்து மக்களுக்கும் பொது என்றும் எடுத்துக்கூறி, அக்கொள்கையே உண்மைக் கொள்கை எனில் இவ்எலும்பு பெண்ணாகட்டும் என்று கொள்கைச் சத்தியம் அமைக்கிறார் திருஞானசம்பந்தர்.★★★

புனிதர் பேரவை

எது நடந்தாலும், தட்டிக் கேட்பதற்கும், தவற்றைத் தவறு எனக்கூறி அதட்டித் திருத்தவும் ஓர் உன்னத அமைப்பு *'புனிதர் பேரவை'* என்ற அமைப்பில் உருவாகி விட்ட பிறகு வந்து அவதாரம் செய்கிறார் திருநாவலூரர். தனியார் திருக்கூட்டமாக இருப்பினும் புனிதர் பேரவை இயக்க உருப் பெற்ற நிலையம் என்ற மரபை எடுத்துக்காட்டி தவறு இறைவன்பால் நிகழ்ந்தாலும் தட்டிக்கேட்கும் உரிமையுடைய நிறுவனமாகப் புனிதர் பேரவை விளங்கியது★ வாழ்க்கையை நெறிப்படுத்த, தவறைத் தட்டிக் கேட்டிட, 'புனிதர் பேரவை' எனும் அமைப்பு இயக்கியதை பெரியபுராணங் காட்டுகிறது.

பூசனை-ஒழுக்கநெறி

திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் *'எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும் உண்மையாவது பூசனை' (செய்யுள் 51)* எனும் பாடலால், அவனைப் பூசனை புரிதலே அவனுக்கு விருப்பமானது என்று தெரிகிறது. இறைவனைப் பூசனை புரிதலே அவனாற் சொல்லப்பட்ட ஒழுக்கநெறி என்பது பெறப்படும்' என்பர் கா.ம. வேங்கட ராமையா★★

கல்வியின் பயன்

ஒருவன் ஒரு பிறவியில் கற்ற கல்வி ஏழு பிறவிகளிலும் பயன்தரும் என்றமையால் அக்கல்வியின் பயனாக எடுத்த பிறப்பில் பக்திவரக்

★ திருத்தொண்டர் மாக்கதை, பாயிரம், திருக்கூட்ட வாழ்த்துப் பாடல்.. முனைவர் வை. இரத்தினசபாபதி, திருமுறைப் பெருமை, தஞ்சாவூர், *1991*, பக், *47*, *48*.

★★ பெரிய புராண வரலாறுகளும், முதுமொழி வெண்பாக்களும், அண்ணாமலை நகர், *1999*, பக், *90*.

காண்கிறோம். இதற்குத் தக்கசான்று வேடர் குலபக்தசிகாமணி கலைமலிந்தசீர் நம்பி கண்ணப்ப நாயனாரே; அவரைப் போற்றாத சமயகுரவர், சந்தான குரவர்கள் இல்லை★ முற்றுத்துறந்த முழு முனிவரும் இடைமருதூர் ஈசனிடம் அருளுபதேசம் பெற்றவருமான வெண்காட்டு அடிகளாகிய பட்டினத்தார் பாராட்டிய மூவர் கண்ணப்பநாயனார், சிறுத்தொண்டர், திருநீலகண்டர் ★★ வாழ்க்கை நெறிகளிலிருந்து கற்று உணர்தலின் பயன்பக்தி என்பதனையும் கற்பவைகளையும் கற்கும் முறை தெரிந்து கற்று அவ்வழியில் நிற்றலும் அவசியம் என்பதனையும் நாம் அறிய முடிகிறது.

நிறைவாக

திருத்தொண்டர் புராணம் எனும் சிறப்புப் பெயர் வாய்ந்த பெரிய புராணம் எனற்பாலது, பெரியர்புராணம் எனப்பெறும் என்பர் ஒரு சாரார். உண்மையாதோவெனின் பெருமையை, வாழ்க்கை நெறிமுறைகளை அறிவுறுக்கும் புராணம் என்பதாகும். இதன் பெருமையை உணர்ந்துதான். 1924களில் J.N. ராமநாதன் என்பவர் J.M. நல்லசாமி பிள்ளை அவர்களால் பெரியபுராணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கச் செய்து வெளியிட்டுள்ளார் ★★★

மக்களின் நம்பிக்கைகளை, வாழ்க்கை முறைகளை சேக்கிழார் விரிவாக எடுத்துரைத்துள்ளார். வேடவர்கள் போன்ற சாதாரண மக்களுடைய வாழ்க்கை முறைகளை கூடநன்கு அறிந்தவர் சேக்கிழார். அசைவ உணவு எப்படிச் சமைப்பது என்பது கூட அவருக்குத் தெரிந்திருந்தது என்பதனை அறிகிறபோது அவரது பரந்த அறிவை அனைவரும் உணரமுடிகிறது ★★★★

பெரியபுராணத்தில் பிராமணர் முதல் பறையர் ஈறாக உள்ள பல சாதி மக்களின் பழக்க வழக்கங்கள், பேச்சு முறைகள், நாட்டின் பெரும் பிரிவுகள், உட்பிரிவுகள், நாட்டு ஆட்சி முறை, சமண, பௌத்த சைவசமயக் கருத்துக்கள் இன்னபிறவும் விளக்ககமாகத் தரப்பட்டுள்ளன. பல்லவர் கால வரலாறு,

---

★ திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதின மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு, திருமுறைத்தாள் நிகழ்ச்சிகள், 1944, பக், 50.

★★ தி. நீலாம்பிகையம்மையார், பட்டினத்தார் பாராட்டிய மூவர், சென்னை, 1935.

★★★ ST. SEKKILAR'S PERIYAPURANAM by J.M. NALLASWAMI PILLAI..

★★★★ பெரியபுராணம், கட்டுரை, முகப்புப் பக்கம் இல்லாத நூல், பக் 122-123

சோழர்கால நாடு, மொழி, சமய நிலை இதில் உள்ளடக்கமாக உள்ளது. இலக்கிய, இலக்கணப் புலமை, திருமுறைப்புலமை, இசை, நடனம், மருத்துவம், வான நூல் முதலிய பல்கலைப் புலமை நெறியினை இதனால் உணரலாம் ★

உலக மக்களுக்கு எக்காலத்ததும் திருத்தகவிற்றாகிய உள்ள நிலைமையை வழங்குதற்குரிய அருள் நூல்களே திருமுறைகளாகும் ★★ இதில் பதினொரு திருமுறைகளிலும், பிற நூல்களிலும் கூறப்பெறாத பல செய்திகள் 12-ஆம் திருமுறையாகிய பெரியபுராணத்துட் காண்கின்றன. திருநீலகண்டர் இளமை துறந்த வரலாறு, நந்தனார் செய்த திருப்பணிகள், சாக்கியர் காஞ்சியில் சிவனைப் பூசித்து முத்தி பெற்றமை, சுந்தரர்-சங்கிலியார் திருமணம் என்பன குறிக்கத்தக்கன' என்பர் மா. இராசமாணிக்கனார் ★★★

வாழ்க்கை

'வாழ்க்கை பெரும்பாலும் இயற்கையோடியைந்தது. இயற்கையோடு இயைந்த இனிய செயல்களைக் கூடப் பலர் செய்ய முடியமால் அல்லற்படுகிறார்கள். ஈத்துவத்தல் இயற்கைப் பண்பே. துன்பம் விளைவித்தல் செயற்கைப் பண்பே. துன்பகற்றி இன்பம் விளைத்தல் இயற்கைப் பண்பே. நன்றிமறத்தல் செயற்கைப்பண்பே. நாளும் நன்றியறிதல் இயற்கைப் பண்பே. ஆயினும் இங்குக் கூறிய இயற்கைப் பண்புகள் மன்பதையுலகில் விளங்கித் தோன்றுதல் அருமையாகவே இருக்கிறது. செயற்கைப் பண்புகளே விஞ்சி, எங்கும் துன்பத் தொடக்குகளையே பார்க்கிறோம். ஆனால் இயல்புக்கு மாறான எவரும் செய்ய இயலாத அதீத ஒழுங்குகளையும் ஏற்றுக் கொண்ட அடியார்களின் வாழ்க்கை நெறிகளை பெரியபுராணத்தில் பார்க்கிறோம்' என்பர் குன்றக்குடி அடிகளார்.

தமிழக மக்களது வாழ்க்கை அமைப்பு, சாதிப்பிரிவுகள், உணவுப் பழக்கவழக்கங்கள், ஆடை அணிகலன்கள், ஒப்பனைகள், திருமணச் சடங்குகள், சமய வழிபாடுகள், ஆடற்கலை, இசை, இசைக்கருவிகள், போர் முறைகள், பஞ்சங்கள், விளையாட்டுக்கள், பொழுது போக்குகள், பொருளாதார நிலை, உழவுத்தொழில், கடல்கடந்த வாணிபம்,

---

★ மா. இராசமாணிக்கனார், சைவசமயம், காரைக்குடி, *1955*, பக் *114*.

★★ க. வெள்ளைவாரணன், பன்னிரு திருமறை வரலாறு, முதற்பகுதி, *1972*, பக் *1*.

★★★ சேக்கிழார், சென்னை, *1945*, பக் *89*.

பண்ட மாற்று முறை, நகர அமைப்புக்கள், பிணிகள், அவற்றுக்கான மருந்துகள், தலயாத்திரை சம்பந்தமான போக்குவரத்துச் செய்திகள் இவையாவையும் பற்றிய செய்திகளை நாமறிய பெரியபுராணம் ஒரு வரலாற்று நூற்களஞ்சியமாக விளங்குகின்றது. 'மக்கள் வாழ்வதற்கரிய கட்டடங்களாகிய அரண்மனை, மாளிகை, நிலா முற்றம், மண்டபம், மனை, கன்னிமாடம், சத்திரம், மடம், பள்ளி, பாழி முதலியன பற்றியும், கோயில், கோபுரம், மண்டபம், பற்றியும் கோட்டை மதில், யானை கட்டும் கூடம் இப்படி பலபற்றி விரித்துக் கூறி, கட்டடக் கலையின் பொக்கிஷமாக பெரியபுராணம் திகழ்கிறது' என்பர் தமிழ் விரிவுரையாளர் செ. வைத்தியலிங்கன்.

இப்படி வாழ்வில் எல்லாத் துறைகளுக்கும் தேவையான அனைத்து விஷயங்களும் பேசப்படுகின்ற பெரியபுராணத்தில் வாழ்க்கை நெறிகளையும் செம்மையாக சேக்கிழார் எடுத்துக் காட்டியுள்ளார். தித்திக்கும் திருமறையாம் திருகுர்ஆனில் 'அம்ம' எனும் 30வது பாகத்தில் 'காஃபிருன்' (நிராகரிப்போர்) எனும் 109வது அத்தியாத்தில் 6வது வசனமாக 'உங்களுடைய மார்க்கம் உங்களுக்கு; என்னுடைய மார்க்கம் எனக்கு'★ "Un to you your religion, and Un to me my religion" ★★"To you be your way, And to me mine"★★★ என்று இறைவன் அறிவிக்கிறான். இவைகளை எண்ணிப் பார்த்திடுவோம்!

சாதி, மதி, இன, மொழி, வேறுபாடின்றி எல்லா உயிர்களிடத்திலும் அன்பு காட்டுவோம்! முன்னோர்கள் வாழ்ந்து காட்டிய நல்நெறியினை நாளும் நாளும் நானிலத்தில் பின்பற்றி வாழ்வோம்! நலம் பெறுவோம்! சமயப்பொறை பேணுவோம்! ஒற்றுமையுடன் உலகம் போற்றிட வாழ்வோம்!

★ ஆ.கா. அப்துல் ஹமீது பாகவி, தர்ஜுமதுல் குர் ஆன், சென்னை 1986, பக் 730.

★★ Marmaduke Pickthall, The Glorious Qur'an, Karachi, P 635

★★★ The Holy Qur-an, Al-Madinah, H-1413, P 2022.

நூலாசிரியர் - வரலாற்றாசிரியர்

செ.திவான் M.A., M.Phil., எழுதிய, பதிப்பித்த நூல்கள்

1.விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள்
(சீதக்காதி அறக்கட்டளையின் முதல் பரிசு ரூ.10000 பெற்ற நூல்)
2.நிகரற்ற பெருவீரன் மருதநாயகம் கான்காசிப்
(உணர்வு வார இதழ் நடத்திய போட்டியில் ரூ. 5000 பரிசு பெற்ற நூல்)
3.ஆரியமாயை அகல...
(சங்கொலி வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5000 பரிசு பெற்ற நூல்)
4.திருகுர்ஆன் தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்
5.நபிபெருமானாரின் நாற்பது பொன் மொழிகள்
6.தக்கலை பீர்முகம்மது(ரஹ்) ஞானப்பாடல்களும் சரிதையும்
7.இந்திய சுதந்திரப் போரில் நெல்லை மாவட்ட முஸ்லிம்கள்
8.வ.உ.சி.யின் அழகும் ஆரோக்கியமும்9. குடை 10. சிந்தனைக்கு
11.வ.உ.சி.யின் துன்பத்தின் கற்பனை12. வ.உ.சி.யும் பெரியாரும்
13.வ.உ.சி.யும் தொல்காப்பியமும்14. வ.உ.சி. பாடல்கள்
15.வ.உ.சி.யின் அரசியல் பெருஞ்சொல்16. தெற்கில் ஒலித்த தீன்குரல்
17.விடுதலைப்போரில் விஸ்வகர்மாக்கள்18. பாரதியும் காங்கிரசும்
19.ஸ்டெர்லைட்டை விரட்டுவோம்!20. உண்மையின் சவுக்கடி
21. கூடங்குளம் அணுஉலையை மூடு22. குடைப்புரட்சி
23.மக்கள் திலகமும் மக்கள் தலைவரும்24. வாகை சூடி வரும் வைகோ
25.கலைஞரை வென்ற வைகோ26. வைகோவின் பொன்மொழிகள்
27.சேதுசமுத்திர திட்ட வரலாற்று நாயகன் வைகோ
28.வ.உ.சி.புகழ் பாடிய முன்னோடிகள்29. வ.உ.சி.யின் நூற்கோவை
30.வ.உ.சி.யும் பரலி சு. நெல்லையப்பரும்31. ஆன்மிகச் சிந்தனை
32.வேதங்கள் வெறுத்திடும் விக்கிரக வழிபாடு
33.செய்குத்தம்பி பாவலரின் ஷம்சுத்தாசீன் கோவை
34.கட்டபொம்மனின் கடைசி நாட்கள்35. வி.ஓ.சி. கண்ட பாரதி
36.இறைநேசச் செல்வர் சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி)
37.வ.உ.சி.யின் வள்ளியம்மை சரித்திரம்38. இறைவனின் திருநாமங்கள்
39.இறுதித்திருநபியும் இயற்கையின் அற்புதங்களும் 40.அண்ணாவின் மறுபக்கம்

விற்பனையில்... (கீழ்க்கண்ட நான்கு நூல்கள் மட்டும்)
41.மாற்றார் மதித்திடும் மாநபி (ஸல்) விலை ரூ.10
42.பெரிய புராணத்தில் வாழ்க்கை நெறி விலை ரூ.10
43.வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப் (ஆய்வுநூல்) விலை ரூ.120
44.ஆரியப் பாதையில் பசுவதை... (அரிய ஆய்வு நூல்) விலை ரூ.100
தேவைக்கு சுஹைனா பதிப்பகம், பாளையங்கோட்டை என்ற முகவரிக்கு M.O. செய்க.

45.கட்டபொம்மனும் கலெக்டர் ஜாக்சனும்(அச்சில்)
46.வ.உ.சி.யின் இன்னிலை 47. கம்பம் பீர்முஹம்மது பாவலர்
48.தெற்குச்சீமையில் தீன்குல மேதை 49. நெல்லைச் சீமையிலே....
50.விடுதலைப் போரில் முதல் முழக்கம் வீரமன்னர் குஞ்சாலி மரைக்காயர்